TDRC 658
R.P. 437/1910

ஜோதிஷரத்னம் என்னும்
[illegible]

Y592V
N10
117302

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

வைசியரத்நம்

என்னும்

# வேளாள சூளாமணி.

இதனுள்

திருக்கை வழக்கம், சண்முகர் பஞ்சரத்நம்

இவைகளும் அடங்கியுள்ளன.

இது

வேதியர்புரம் போஸ்ட்மாஸ்டர்

N. சிதம்பரம்பிள்ளையவர்கள்

வேண்டுகோட்கிசைய,

தெக்பரம்

சிவ, அ. சாமிநாதபிள்ளையால்

செய்யப்பட்டு,

அம்மன்பேட்டை மிராசுதாரரும்,

சற்குணசீலருமான

அ. மஞ்சையாபிள்ளையவர்களது

நன்முயற்சியால்

தஞ்சை ஸ்ரீ வித்யாவிநோதினி அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

இதன் விலை] 1910. [அணா 4.

Copy-right Registered.

ஸௌமிய-ஞு தை. மீ

117302

# முகவுரை.

திருவிளையாடல், வேதத்துக்குப் பொருளருளிச்செய்த படலம்

அருமறை நால்வே றாகையால் வருண மாச்சிர மங்களு நான்காய்
தருமம் யாகாதி கருமமு மறையின் றலைமையிற் றோன்றிய மறையுங்
கருமநூன் ஞான நூலென விரண்டாங் கருமநூ லிவனுக் கியைந்து
வருமவினை புணர்த்து ஞானநூ லிவன்றன் வடிவிலா வடிவினைப் புணர்த்தும்

இங்ஙனம் முனிபுங்கவர் திருவாய் மலர்ந்தருளியவாறு நான்மறைவழித்தாய் உலகியற் பல்பொருட் ஜீவாஜீவ பேதங்களுள் பெரும்பாலுமிந் நால்வகைத்தே யென்றும், அவற்றுள் இடைத் தக்கியமக்கட் பிறப்பினரும் நான்கு வகையானே தோன்றினரென்பதூஉம் செவ்வனே விளங்குமன்றோ? அங்ஙனமாய சதுர்வருணத்தவருள்ளும் உலகுய்யவந்த உத்தம வைசியர்களாம் வேளாண்மாக்களை நான்முறைவழி(யாய்) மரபறிய ஆற்றலற்ற பலர் சிலகாலமாக இயல்பாகவே சூத்திரரென்று வழங்கி வருகின்றார்கள். அன்றியும் வேளாண்மாக்களுட் சிலரைவினவுங்கால் அவர்களும் தாங்களின்ன வகுப்பிற்சேர்ந்தவர்களென்கிற விஷயமறியாதவர்களாயே யேதோ சிற்சில புகன்றுவருகின்றார்கள். ஆகவே இஃதுணர்ந்தயாம் தற்போதே இவ்வாறிருப்பின் பிற்போது பெரும்பாலும் பராபுதிரியாமெனக்கருதி நமது பூர்வாசிரியர்களின் தீர்மானமாகிய பன்னூற்பிரமாணங்களிற் சிலவற்றை ஆராயப்புகுந்தாம். அங்ஙனம் ஆராய்ந்தறிந்தமட்டில் வேளாளர் வைசிய வகுப்பினரென்றே நன்கு புலப்பட்டது. இதனை யாமுணர்ந்தவாறே நம்மனோரெவரும் அறிதல் வேண்டுமென்றும் அவாக்கொண்டு பன்னூற் பிரமாணங்களோடு குருசிஷ்ய வினாவிடை முறையாகத் தொகுத்து "வேளாள சூளாமணி" யென்றோர் பெயரிட்டு வெளியிட்டனம்.

இதனை விரைவில் வெளிப்படுத்த வேண்டுமென்று சிலநண்பர்கள் தூண்டினமையாலே அவசியம் சேர்க்கக்கூடிய நற்பிரமாண முதலிய சிலவிஷயங்களை இம்முறை சேர்க்கக்கூடவில்லை; அவைகளை அடுத்த பதிப்பிற்சேர்த்து வெளியிடுவதாக உத்தேசித்திருக்கின்றேம்.

இங்ஙனம்,

சி. அ. சாமிநாதபிள்ளை.

Y5:92V N10

கடவுள் துணை.

# சிறப்புப் பாயிரம்

## சாத்துகவி.

திருநெல்வேலி வண்ணார்பேட்டை சைவப்பிரசாரகர் மகா-ள-ள-ஸ்ரீ
கோவிந்தசாமிபிள்ளை யென்னப்படும்

சுந்தரமூர்த்தி பௌராணிகரவர்க ளியற்றியன.

அறுசீர்க்கழி நெடில் விருத்தம்.

பன்னூலும் விதந்தோதும் வைசியவே ளாளரின்மெய்ப் பரிசு காட்டும்
பின்னூலின் முன்னூலே யொன்றிரண்டு சிறந்தனவாப் பிறங்கிற் றேனு
முன்னூலிற் கடைக்கெதித்த வைசியரத் தினமென்ன மொழிநின் னூலே
யென்னூலிற் பொருள்காட்டு ம்புடையெனு முன்னூலா மியம்ப லாமே (1)

இத்தகைய நூலதனை யியற்றின்ற் யாவனெனி னிருக்கே முன்று
வெத்தகைய கடவுளரு மேத்தவி ன்செம்பரத்தி வினிது வாழ்வோன்
உத்தமசி வத்தனரு ணாசலவேள் பெருந்தவத்தா லுதித்த தோன்றல்
சத்தசத்தி னியல்தெரிந்த பெரும்புலமை மிகுசாமி நாதன் றானே (2)

---

மதுரைத் தமிழ்ச்சங்கத்து லெ. ஃ. தோடா முதலிய வுயர்தர
பரிசுகள்பெற்றவரும், திரிசிரபுரம் S. P. G. காலேஜ்
தலைமைத் தமிழ்ப் பண்டிதருமாகிய

மஹா-ள-ள-ஸ்ரீ. மு. வேங்கடசாமிநாட்டாரவர்கள் இயற்றிய

அறுசீரடியாசிரிய விருத்தம்.

குழவிமதி யணிவேணிப் பெருமானுர் வெள்சங்கக் குழை யார்முன்னைப், பழம்பொருட்கும் பழம்பொருளா னவர்புலியும் பதஞ்சலியும் பணித்து போற்ற, அழகொழுகும் பொன்மன்றத் தைத்தொழிலார் நடம்புரியும் அருமை யெய்த, நிழல்குலவுத் தில்லைவனப் பெருமையினை யாவரே மிழற்றுகிற்பார். (க)

அப்பெரிய பதியிலரு ணசலவே டவத்தினவ தரித்த செம்மல், இப்புவியிற் பிறர்க்கரா ரெனுங்குணத்தனன்னடையனினிய சொல்லன், செப்பரிய திருநீறு திகழ்படிவ னுண்மதியன் சிவன்றாளையன், ஒப்பருவே ளாண்டகைவன் சாமிநா தப்பெயர்கொ ளுரவோனவான். (௨)



MADRAS

பலந்தருமா றறிவுடைய மக்களினுட் பரகின்மனத் தூய்மை வாய்மை, அலந்தருசெந் நெல்லாலே யுயிர்முழுதும் வளர்க்குமரு ளமையுஞ் சிந்திக், குலந்தருநற் காராளர் சரிதம்பல் நூலாய்ந்து குலவத் தீட்டி, நலந்தருவே ளாளரு ளாமணியென் றொருபெயரும் நவின்றிட்டானே. (௩)

---

திரிசிரபுரம் எஸ். பி. ஜி. காலேஜ் தமிழ்ப்பண்டிதர்

மஹா-ள-ள-ஸ்ரீ அ. சுந்தரநாதபிள்ளையவர்க ளியற்றிய

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

நாமணக்கும் பாமணக்குந் தமிழ்மணக்குங் கழுவினைநவை கடனுஞ்செய்யத், தாமணக்குந் தூமணக்கும் பொற்சபைசேர் தனித்தில்லை தனிவாழ் கோமான், பீமணக்கும் மாமணக்கும் அருணாச லப்பெரியோன் விழைந்த வேள்வி, பூமணக்கும் புகழ் மணக்கும் புத்திரனுப் புவிபிறந்த புனித மேலோன். (க)

பூமினர் மயல்விஞ்சி மட்டொழுகப் புகுமழகன் பொருந் தும்வாசக், காமிறு சித்திரனி னறெமெனுஞ் சுகபோகன் கடமின் றாமச், சாமிநா தன்கழல்சேர் மெறவாத் தமிழ்ப்புலவன் தருசீர் செங்கைச், சாமிநா தக்குரிசில் செந்தமிழால் விருவிடையாத் தரணி போற்ற. (௨)

சீர்பூத்த நிலவிதழின் கமலையன் படைத்தருளுந் திக்குமக்கட், கார்பூத்த குழுவதனிற் குலவியதால் வருணத்துட் குலமார் வேளாண், பேர்பூத்த ம்பினர்தஞ் சிறப்புரிமை விரிவினைத்தும் பிறங்க வோர்நூல், நார்பூத்த வேளாள குலாமணிப் பெயரால் நவின்றுனம்மா. (௩)

---

மதுரை மேலமாசிவீதி வித்வான்,

மஹா-ள-ள-ஸ்ரீ திருமலைமுத்துப்பிள்ளையவர்களியற்றிய

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

காருரு மலர்ப்பொழிலுங் கஞ்சமலர்ச் செழுந்தடமுங் கவின்செய் தோங்கு, சீருறும் வேளியனுர் நடம்பயிலுந் தில்லை புலியாளிலவும் பூமிந், தேருரு மறைமறுவாதமனன் கங்கைகுலன் செல்வியாளன், சீருறும் புயனுருளு சலமகிபன் செய்மோன்பிற் சிறக்கவந்தோன். (க)

மலைமுனி வனுமலைய வண்டமிழை யொருங்குணர்ந்த வலவன் சீர்த்தி, நிலையுறவுன் னிசாமி நாதனெனப் பெயர்கொண்ட புனைன் றேர்ந்தே, அலையுமது காப்பன்மலர் மதுநுகரும் பான்

மையெனவுருத்தி போம், கவிபல்லா ராய்ந்தெடுத்து கற்றவரு
மற்றவருங் களிக்கு மாறு. (௨)

புகழ்பெறுமுன் ருமச்சந்திரனைத் தரப்பெருமை நலக்கமிகப் பொருந்த மாகத், தகைமையுடனே வேளாள குலாமணியெனவன்று வுமருந் தூய்மை, திகழ்மணியுங் கோத்திரத்தனைத் தொகுத்துரைத்தா னிதற்கு முன்னங் தேவர் கூடி, இகல்கொடுமைந் தித் தெடுத்த தெள்ளமுதம் போலாக இதம்பின் னன்றோ. (௩)

---

தஞ்சாவூர் மகர்நோம்புச்சாவடி தர்ம ஸ்கூல் உபாத்தியாயர்

ம-ா-ா-ஸ்ரீ இராமையாவல்தாஸு அவர்களியற்றிய

நேரிசை வெண்பா.

பாவேவு வேதாகம மக்களேயு மாராய்ந்து
தேமேவு வேளாளர் சீர்சரிதம் — பூமேவு
போதம் படரும் புலியூர்வா ழுஞ்சாமி
நாதன்செய் தான்றமிழி னால்.

---

## இஃது ஓர் சித்திரகவியாகச் செய்யப்பட்டது.

அறுசீர் விருத்தம்.

சீர்பரவும் வேளாளர் வைசியரென் றோர்நூலைத் திரட்டி யிந்தான்
பார்பரவுந் தில்லையரு ளுசலவே டவத்திலெனி றுற்பவித்த சீல
னேர்பரவுஞ் செந்தமிழி னியலுணர்ந்த நாவீரசைவன் மின்சொல் லானன்
நீர்பரவு செஞ்சடிலச் சிவபெருமான் றிருவடியை நீங்காத் தொண்டன்

நேரிசை வெண்பா.

அன்னவன்பே ரோர்க்கேனோ ரண்டெழுப ஞானனே
முன்னுயிரா ஷ்ப்பெயரோ டோனாம் — சொன்ன
முறைபிறழா தேவிருகாண் முற்றுமுணர்ந் தக்கால்
மறைபொருளா காதே மதி.

---

தஞ்சையைச் சார்ந்த தென்பிரம்பூர் தமிழ் முனிஷியார்

மகா-ா-ா-ஸ்ரீ சொ. நடராஜையரவர்க ளியற்றிய

அறுசீர் விருத்தம்.

சீராரும் வேளாளர் குலப்பெருமை யாவருக்குந் தெளிவாய்த் தோன்ற
பாராரும் வைசியத் தினமெனுநூ லினைபுலவிற் பரிவாய்ச் செய்தான்
பேராரும் புலியூரி லமாருஞ சலக்குரிசில் பெற்ற சீலன்
ஏராரும் புலமைநிறை சாமிநா தப்பெயர்கொ ளினிமை யோனே.



தஞ்சையைச்சார்ந்த வெள்ளாம்பிரம்பூர் வித்வான்

மகா-ா-ா-ஸ்ரீ சு. துரைசாமிச்சேர்வைகாரவர்க ளியற்றிய

எண்சீர் விருத்தம்.

குறுமுனியுங் குறுமுனிகா னென்று வந்தக்
குமாரனுமான் குமரனென்று னேரு தி லாத
அருமறையா னுஞ்வெள்ளா யானெனன்று
எம்பலம்வாழ் வியனருளு ளுசலைப்பேர்
பெருமையுளோன் றலைத்தறிந்துக் கலை பேர்த்த
பெருந்தகையோன் செல்வமெ ய்தநூலின்
அருமையையோர்க் துரைத்தனரே தகவை யோர்த்து
அவனியுளோர் செவ்வறைவ யவர்பே சென்மோ.

நேரிசை வெண்பா.

சோரு மூன்றிரண்டுஞ் சேருமொரு பானொன்றும்
ஊர திருநாள் குடலிரண்டும் — பேராரும்
ஏழொன்றீ சொன்பான்பே ரெய்தியவ னித்திலத்தின்
வாழ்நீ டு மிழ்த்து.

---

இராஜேந்திரம் தாலுகாவில் வித்தியாசாலைக்கதிபர்

ம-ா-ா-ஸ்ரீ. வைத்திலிங்கம்பிள்ளையவர்க ளியற்றிய

அறுசீர் விருத்தம்.

நீர்பூத்த புண்டரீகத் தவன்முறைபூத் தெண்ணான்கு விலவங் கொள்கை
யார்பூத்த மனையுடன் மாண்பூத்த இறைவியின் மருவச் செங்கை
யேர்பூத்த குடிமாபி னெழில்பூத்த சரிதமென மெழுதப்பூத்த
பார்பூத்த நாவினையா மிரம்பத்த காவினுரும் பகரற்பாற்றோ. (௧)

அத்தகைய வேளாளர்க் கொருகுல மணியெனுநூ லுறையக் கண்டான், எத்திசையும் புகழுடையான் றிருத்தங் செழுந்தொகுடைசெயப் பூண்டவன், தூத்துவதா லினையாயவன் றலைத்தூய்மை வாய்மையுநற் குணத்தாச் கேள்வும், புத்தியினு னுடமெனுமீ குவலயனிரோர்க் கின்மொழியே பகரா நிற்பன். (௨)

தாதையரு ளுசலனத் தவமெனுமூ தாதையருந் தவமே லாகப்
போதமுளோ னவருமின் புறவோற்கு மில்லறமே புரிவா நிற்பன்
சேமநிச் சடையினுடைமா டப்பொதுவிற் றிகழுஞ் சாமி
நாதனெனப் பெயருடையா னியமிழ்க் கினியகவி நாவ லோனே. (௩)

## அவை யடக்கம்.

கான்மேவும் வரிவெங்கைக் கோபுரத்தவ னுடலின்வரை காணத்திட்டித்
தான்மேவும் பூசையெனக் கற்றறிந்தார் போனடித்துத் தூணிமீதே
கான்மேவும் படிவெனான் மரபினர்வை சிபொன்றே னின்றே னித்த
நான்மேவும் வழுவகற்றி யறிஞர்பொரு ளோர்வரென நோக்கத் தானே.

## ரிஜிஸ்டர் அறிவிப்பு.

இப்புஸ்தகமானது வெகுசிரமத்துடன் அநேக அரியநூலிகளின்றும், மற்றும் ஏட்டுப்பிரதியினின்றும் விஷயபெயர்ப்பு மொழிபெயர்ப்புசெய்து அச்சிட்டு கவர்ன்மெண்டாரால் ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கிறபடியால் மீறி அச்சிடுபவர்கள் தவறுத நஷ்டத்துக்குக் கட்டுப்படுவார்களென்பதை அறியக்கடவர்கள்.

### விலை விவரம்.

இப்புத்தகத்தை மொத்தமாகப்பெற பிரியமுள்ள வியாபாரிகளுக்கு விலை நயமாய்க்கொடுக்கப்படும். 4 அணா ஸ்டாம்பு அனுப்புபவர்களுக்கு 1-புத்தகம் புக்போஸ்டாக அனுப்பப்படும். அன்றி வி-பி. போஸ்டிலும் அனுப்பப்படும். 5-க்கு ஒன்று கமிஷனாக கொடுக்கப்படும்.

## சிற்றின்ப சாஸ்திர சிந்தாமணி.

இஃது நம்தமிழ்நாட்டுச் சகோதர சகோதரிகளின் சந்தான விர்த்திக் கேதுவாகிய மர்மவிஷயாதிகளுக்குரிய விதிவிலக்குகளைப்பற்றிச் சவிஸ்தாரமாகவும் எளியநடையாகவும் எழுதி யாவர்க்கும் புலப்படுமாறு வினாவிடையாகச் செய்யப்பட்டுள்ளது.

புத்தகம் 1-க்கு விலை அணா 4. வி. பி.-யிலும் அனுப்பப்படும். வியாபாரிகளுக்கு நயமாய்க் கொடுக்கப்படும். 4-அணா ஸ்டாம்பு அனுப்புவோர்களுக்கு 1 புத்தகம் புக்போஸ்டாக அனுப்பப்படும்.

இங்ஙனம்
C. A. சாமிநாதபிள்ளை, வேதியர்புரம், தஞ்சை.

உ
கணபதி துணை.
திருச்சிற்றம்பலம்.

வைசியரத்நம்
என்னும்

# வேளாளசூளாமணி.

### திருச்சிற்றம்பலமுடையார் துதி.

உலகெலாமுணர்ந் தோதற்கரியவன்
நிலவுலாவிய நீர்மலிவேணியன்
அலகில்சோதிய னம்பலத்தாடுவான்
மலர்சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்.

### முருகவேள்துதி.

மாயையின் வலியோனாகி மான்முதலோரை வென்று
ஆயிரத்தெட்டண்டம் அரசுசெய்துக ஆற்றொட்டுக்
காயமதழி வின்றகுக் கடவுளர்க் கலக்கஞ்செய்த
தீயசூர் முதலைச்செற்ற குமரன்றாள் சென்னிவைப்பாம்.

### மும்மூர்த்திதுதி.

இறைக்குரிய வத்தனார்க ளெறிபரவ மனுவிளங்கத்
துறைக்குரிய காரணர் தமதுவம் பிணிதீர்க்க
மறைக்குரிய பூமனையும் வண்டிரைபத் தாமனையும்
பிறைக்குரிய நெடுஞ்சடைப் பெம்மானை யும்பணிவாம்.

## குருசிஷ்ய வினாவிடை
## சதுர்வருண விளக்கம்.

மாணவன்:—வருணம் எத்தனை வகைப்படும்?

ஆசிரியர்:—நான்கு வகைப்படும்.

மா:—அவை யாவை?

ஆ:—பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் என்னும் நால்வருமாம்.

மா:—இந்நால்வரும் ஆதியில் எவ்வாறு தோன்றினர்?

ஆ:—பிரமதேவருடைய முகத்தினின்று பிராமணரும், புஜத்தினின்று க்ஷத்திரியரும், துடையினின்று வைசியரும், பாதத்தினின்று சூத்திரரும் பிறந்தனர்.

மா:—இவர்கள் இங்ஙனம் பிறந்ததைக் கூறும் சுருதிகள் யாவை?

இருக்குவேதம், புருஷ சூக்தம்.

ஆ:—பிராமணோஸ்ய முகமாஸீத் பாஹூ ராஜன்ய: க்ருத:
ஊரூ ததஸ்ய யத்வைஸ்ய: பத்ப்யாம் சூத்ரோ அஜாயத

மநு முதல் அத்தியாயம் ௮௭-வது சுலோகம்.

ஸர்வஸ்யாஸ்யது ஸர்கஸ்ய குப்த்யர்த்தம் ஸமஹாத்யுதி:
முகபாஹூருபஜ்ஜாநாம் ப்ருதக்கர்மாண்யகல்பயத். என்பனவும் பிறவுமாம்.

மா:—இந்நான்கு வருணத்தார்க்கும் முறையே தொழின் முறை கூறுப.

## சதுர் வருண தருமம்.

ஆ:—பிராமணருக்கு:—வேதம் ஓதல், ஓதுவித்தல், யாகஞ் செய்தல், செய்வித்தல், தானங் கொடுத்தல், வாங்குதல் ஆக ஆறுமாம்.

மநு ௮௮-வது சுலோகம்.

அத்யாபனஞ்சாத்யயனம் யஜனம்யாஜனந்ததா
தானம்ப்ரதிக்கிரஹஞ்சைவ பிராஹ்மணாநாமகல்பயேத்.

க்ஷத்திரியருக்கு:—பிரஜைகளைக் காத்தல், தானங் கொடுத்தல், வேதம் ஓதல், பாட்டு கூத்து ஸ்திரீ முதலாய விஷயங்களில் மனஞ்செல்லாதடக்குதல் ஆகிய இந்நான்குமாம்.

மநுஸ்மிருதி ௮௯-வது சுலோகம்.

ப்ரஜாநாம்ரக்ஷணந்தான மிஜ்யாத்யயநமேவச
விஷயேஷ்வப்ரஸக்திஸ்ச க்ஷத்திரியஸ்யஸமாஸத:



வைசியருக்கு:—பசுக்காத்தல், தானங்கொடுத்தல், வேதமோதல், பயிர்செய்தல், ஜலத்திலும் பூமியிலும் உற்பவிக்கும் இரத்தினம், நெல் முதலியன வியாபாரஞ்செய்தல், வட்டிவாங்குதல் ஆகிய இவ்வாறுமாம்.

மநுஸ்மிருதி ௯௦-வது சுலோகம்.

பசூநாம் ரக்ஷணந்தான மிஜ்யாத்யயனமேவச
வணிக்பதங்குஸீதஞ்ச வைஸ்யஸ்ய க்ருஷிமேவச.

சூத்திரருக்கு:—மேற்கண்ட மூன்று வருணத்தார்க்கும் பொறாமையின்றிப் பணிசெய்வதே முக்கியமான தருமமாம்.

மநுஸ்மிருதி ௯௧-வது சுலோகம்.

ஏகமேவது சூத்ரஸ்ய ப்ரபு: கர்மஸமாதிஸத்
ஏதேஷாமேவ வர்ணாநாம் ஸுஸ்ரூஷாமனஸூயயா.

மா:—இக்கால்வரில் வைசியருக்கு மேற்கூறிப்போந்த மநுவாக்கியங்களன்றி மற்ற இருடிகள் எழுதிய ஸ்மிருதிகள் கூறியிருப்பின் அவைகளையும் கண்டு விளக்குக.

பாராசரஸ்மிருதி ஆசாரகாண்டம் ௯௨-வது சுலோகம்.

ஆ:—லாபகர்மததாரத்னம் காவாஞ்சபரிபாலனம்
க்ருஷிகர்மசவாணிஜ்யம் வைஸ்யவிருத்திருதாஹ்ருதா.

(இ-ள்) வட்டிவாங்குதல், இரத்தின முதலிய மணிச்சோதனை செய்தல், பசுக்காத்தல், உழுது பயிர் செய்தல், கொள்ளல் விற்றல் என்பன வைஸ்யதர்மமாம்.

பிரகஸ்பதி ஸ்மிருதி.

ஸ்வாத்யாயோயஜநந்தானம் பசுகோபாலநந்ததா
குஸீதக்ருஷிவாணிஜ்யம் வைஸ்யகர்மாணிஷட்ததை.

(இ-ள்) வேதமோதல், வேள்விபுரிதல், ஈதல், பசுக்காத்தல், வட்டியிட்டல், உழவுத்தொழில் செய்தல், பண்டமாற்றுதல் ஆகிய இவ்வேழும் வைஸ்ய தருமமாம்.

யாஜ்ஞவல்கிய ஸ்மிருதி.

குஸீதக்ருஷிவாணிஜ்ய பாஸுபால்யம்விஸ:ஸ்ம்ருதம்,

(இ-ள்) வட்டிவாங்குதல், உழவுசெய்தல், நெல்லளவிற்றல், பசுக்காத்தல் வைசிய தருமமாம்.

வராகபுராணம்.

ஸ்வாத்யாயம் யஜநந்தானம் குஸீதம் பசுபாலனம்
க்ஷேத்ரகர்ஷணம் வாணிஜ்யம் குர்யாத்வைஸ்யோ யதாவிதி.

(இ-ள்) வேதமோதல், வேள்விசெய்தல், தானமீதல், வட்டிவாங்குதல், பசுநிரைமேய்த்தல், உழவு, வாணிபம் ஆகிய இவைகள் வைசியதருமமாம்.

மார்க்கண்டேயபுராணம்.

தானமத்யயனம்யக்ஞோ வைஸ்யஸ்யாபி த்ரிதைவது
வாணிஜ்யம் பாசுபால்யஞ்ச க்ருஷிஞ்சைவாஸ்யஜீவிகா.

(இ-ள்) தானமீதல், வேதமோதல், வேள்விசெய்தல் இம்மூன்றும் வைதிகதருமமாகவும், வாணிபம், பசுநிரைகாத்தல் உழவுத்தொழில்செய்தல் இம்மூன்றும் சீவனத்தொழிலாகவும் வைசியன் கைக்கொள்ளக்கடவன்.

மா:—மேற்கூறிய ஸ்மிருதிவாக்கியங்கள் சிறந்த தமிழ்ப்புராண ஆதாரங்களுளவேல் அதனையும் கண்டு விளக்கிக்காட்டுக.

ஞாளந்திபுராணம் சஉ-வது அத்தியாயம் உகூ-வது செய்யுள்.

ஆ:—வணிகர்தஞ்செய்தி கூறின் மகவினையாற்றலோதல்
உணர்வுடையவர்க்குத்தான முதவல்வேளாண்மையோம்பல்
தணிவில்வாணிகத்தாலீட்ட லானினந்தழைப்பக்காத்தல்
துணிவுறுமிவைமற்றன்னோர் செய்வனதொகையென்றும்.

மா:—இதனால் மேலேகாட்டிய வேதஸ்மிருதி புராணங்களால் தொன்றுதொட்டு இன்றுவரை பயிர்செயல், வியாபாரம், பசுக்காத்தல் என்னு முத்தொழிலையும் விடாது பரம்பரையாக நடத்திவரும் வேளாளர்கள் வைசிய வகுப்பினராகவே இனிது விளங்குகின்றது! அங்ஙனமாயின் சூத்திராவார் இன்னரென்பதைத் தக்க பிரமாணங்களால் சாற்றல்வேண்டும்.



# சூத்திர விவரணம்.

[illegible]

ஆ:—தொண்டமண்டலவளிகை மூவாறுகுடிமக்கள்
கருதிகள் முதலாகவே
தங்கமிகுநாவிதன் குயவன்வண்ணானுடன்
சொன்னபடி பெருந்தச்சன்
கண்டகம்மாளர்வகை ஐயவர் வாணியர் மூவர்
கந்தமை பாகோரார்
கண்மிதுசாடேட்டு பாணன்றலைக்கடைக்
காவல்புரி பள்ளிவலையன்
பண்டுமுதலாரர் மழிக்குமிடையன்விருது
பலகூறு கடிக்குமடையான்
பதினெண்மர்குடிமக்க ளெனவருங்காராளர்
பணிசெய்து பற்றுறையும்
கொண்டுபல்வட்டமுங் கட்டி[illegible]வரிக்
குவலய பதிக்கவைகள்
கூறியகவிகா தேக்பாலயத்
குமுதத்தி[illegible]ட்டலேயே.

என்றிவ்வாறாக தொண்டமண்டலத்திற் சிறந்த காஞ்சிமாநகரத்து ஏகம்பவாணராயத்திலே ஓர் அழகிய கற்கம்பத்திலே பண்டுதொட்டு இவைகள் காணப்பட்டமை கொண்டும், மற்றும் மேற்கூறிய பதினெண்மரும் தத்தந்தொழிலின்றி வேளைமயுமான மூவருணத்தார்க்கும் ஊதியத்தொழிற்காரர்களாய் இனிது விளங்குவதாலும் இப்பதினெண்மருமே சூத்திரவகுப்பினராவர்.

மா:—இச்சூத்திரர்கட்கு மேல்வருணத்தாரய வைசியர்கள் ஒரேவகுப்பினராய் விளங்குகின்றார்களா? அல்லது பலவகுப்பினராய் விளங்குகின்றார்களா?

ஆ:—பலவகுப்பினராகவே விளங்குகின்றார்கள்.

மா:—அப்பலவகுப்பினரும் எவ்வெப்பெயர்கொண்டு விளங்குகின்றார்கள்?

## வைசியரின் உட்பிரிவு.

தானியங்கொண்டு பொன் வெள்ளி இரத்தினம் இவை முதலானவைகளை வியாபாரஞ்செய்பவர் தனவைசிய செட்டிகளென்றும், ஆநிரையோம்பி உழுதுபயிர்செய்பவர் பூவைசிய பிள்ளைமாரென்றும் பெயர்பெறுவர்கள்.

ப்ர:—இவர்களுள் பூமியில் உழுது பயிர்செய்யும் வேளாளரென்னும் பிள்ளைப்பட்டதாரிகளுக்குச் சிறப்புப்பெயர் யாது?

## வேளாளரின் பூர்வநாம விளக்கம்.

ஆ:—மண்டலபுருடன் செய்த சூடாமணிநிகண்டில் 2-வது மக்கட்பெயர் தொகுதியில், இளங்கோக்கள், மன்னர் பின்னர், இப்பர், எட்டியர், காராளர், வேளாளர் என்னும் இவ்வாறும் பிறவுமாம்.

ப்ர:—இவ்வறுவகை பெயர்க்கும் பொருள் யாவை.

ஆ:—இளங்கோக்கள்:—முதற்பொருளாகிய நிலம், பொழுதிரண்டிற்கும் தலைமைபெற்ற அரசர்போலல்லாது நிலமொன்றற்கே தலைமைபெற் றவர்களாதலின் இளங்கோக்களெனப்படுவர்.

மன்னர் பின்னர்:—வேதியரை முதலவரென இடவரைகூறினதுபோல, அரசர்க்கு அடுத்தபடியினராதல்நோக்கி மன்னர் பின்னரென அடைமொழி இடவரையறுத்ததென்க.

இப்பர்:—யாவர்க்கும் இம்மைப்பயனுக்கு உபகாரகாரணக் கொண்டதாலென்க.

எட்டியர்:—ஓர் காலத்தில் அரசனாற் கொடுக்கப்பட்ட தேசவழக்காகிய சிறப்புப் பட்டப்பெயராம்.

காராளர்:—கார் என்பது மழைக்கும், பருவத்தொன்றற்கும் நீர்க்கும் பெயராதலால் அதனையாளுவோர் என்றபடி.

## வேளாளநாம விளக்கம்.

வேளாளர்:—வேளாளரென்னுஞ் சொல், வேளாண்மையெ ன்பதிலிருந்து வந்தது. இதன் சாதாரணப்பொருள் பயிர்செய்



தல், தானஞ்செய்வோன் எனப்படும். அஃதாவது அறுவடைகாலத்தில் களத்தில்வரும் சகலருக்கும் மேரை முதலிய கொடுத்தலாலும், அரசர்களுக்கு இரண்டாவதாக நமது தேசத்திய வித்துவான்களுக்கும் மற்றைக் கல்விமான்களுக்கும் இம்மரபினரே பெரும்பாலும் சன்மானங்கள் செய்துவந்ததாகக் கூறும் சரித்திரங்களாலும் நன்குபுலப்படும்.

இன்னும் வேளாண்மை என்பது, நன்றி, ஈகை, வேளாண் டொழின்மை முதலிய பலபொருட்குறித்த ஓர் சொல். அஃது வேளாண்டொழிலுடைமையானன்றி ஈகைமுதலிய நற்செய்கையுடைமைக்கும் உரியதோர் குடிப்பண்பாயிற்று.

இன்னும், வேளாண்டொழில், வேள்-நன்னிலம், ஆள்-உரிமைத்தலைமை, தொழில்-முயன்று முடித்தல், இதனால் நன்னிலத்திருத்தி செந்நெல்பொங்கப் பயங்கொள்ளுதற்கு முரிமைத் தலைமைத் தொழிலெனப்படும்.

இன்னும், வேள்-விரும்பப்படுகை, ஆண்டொழில்-ஆண்மைத்தொழில். இதனால் அரசரால் விரும்பப்படும் மந்திரித்தலைமை, சேனைத்தலைமை முதலிய ஆண்மைத்தொழிலுடையோரென்பதூஉம் அமையும்.

இன்னும், வேளாண் குடிப்பிறப்பினர் ஈகைமுதலிய நற்செய்கைகளின் மிக்காரென்பதற்கு வேறு கூறவேண்டுவதின்று. இவர்கள் குடிப்பெயரே சான்றென்க; அன்றியும் அந்தணர் அரசர் சூத்திரர் முதலியோர் தத்தமக்குரிய ஒழுக்கங்களை நடாத்துதற்கு வேளாண்குடிகளின் உதவி முற்றும் வேண்டியிருத்தலின் இவர் செழி பெருநெறி யென்பதற்கு மஃதே சான்றென்க.

ஸ்ரீ திருஞானசம்பந்தசுவாமிகள் தேவாரம்.

வாளார்கண் செந்துவர்வாய் மாமலையான் றன்மடந்தை
தோளாகம் பாகமாப் புல்கினான்றொல்கோயில்
வேளாளரென்றவர்கள் வள்ளன்மையான்மிக்கிருக்குந்
தாளாளராக்கூரிற் றான்றோன்றிமாடமே.

திருவள்ளுவதேவர் குறள்.

தாளாண்மையென்னுந் தகைமைக்கட்டங்கிற்றே
வேளாண்மை யென்னுஞ் செருக்கு.

(இ-ள்) தாளாண்மை என்னும் தகைமைக்கண் தங்கிற்று. முயற்சியென்று சொல்லப்படுகின்ற உயர்ந்த குணத்தின்கண்ணே நிலைபெற்றது. வேளாண்மை என்னும் செருக்கு எல்லார்க்கு முபகாரஞ்செய்தலென்னும் மேம்பாடு எ-று.

இதனால் மேற்கூறிய இருவைசியர்களினும் உழவர், வேளாளர் என்றழைக்கப்படும் பயிர்செய் வேளாண்மாக்களே மிக்கதோர் மேம்பாடுடையாரென்று உள்ளங்கை நெல்லிக்கனியென செவ்வனே விளக்குகின்றதென்க.

மா:—ஆயின், ஏனைய இழிமக்களுட்சிலரும் (அதாவது பதினெண்வகை ஏவற்றொழிற் சூத்திரர்களும்) தம்முள் பயிர்செய்தல், வியாபாரம், பசுக்காத்தல் முதலியன செய்துவருகின்ற காரணங்கொண்டு அவர்களையும் ஏன் வைசியவகுப்பினராய வேளாளரென்று கூறவொண்ணாது?

## வைசியதொழில்கொண்ட சூத்திரர் வைசியராவரெனல்.

ஆ:—வைசியராம் வேளாளமரபினர், இற்றன்று; பன்னெடுங்காலமாகப் பிறவியினியற்கைபற்றிப் பரம்பரையாக வேளாண்மைக்கு ஏதுவான தாளாண்மையையே தங்கட்குரிமையெனக்கொண்டு, காலவேறுபாடு, இடவேறுபாடு, செயல்வேறுபாடு எப்பாலவற்றால் சிறிதும் மாறாது ஓரே நிலைமைத்தாய் வாழ்ந்துவருகின்றனர். சூத்திரர்களோவெனில், தாங்கள் தங்கள் இயற்கைத் தொழிலாய மேல்வருணத்தார்க் கேவல்புரிவதை சிற்றுணர்வால் இழிவெனமதித்துக் காலவேறுபாடு, இடவேறுபாடு, செயல்வேறுபாடு முதலிய நவீனசங்கற்ப விகற்பங்களால் இயன்றவாறு சமயம்நேர்ந்துழி பற்பல தொழிலுரிமையைச் சாதித்து உடலோம்பலொன்றையே கடைப்பிடித்து, வந்த வகுப்பிற்கேற்ற வான்முறை பிறழ்ந்துழல்வது நோக்கி இவர்களை வேளாண்மாக்களென்று கூறல் எட்டுணையும் பொருந்தாதென்க.



மா:—இத்தகைய சிறப்புடைச்செல்வர்களாய வேளாண்மாக்களுக்குப் பசுக்காத்தல் வந்தவாறென்னே?

## பசுக்காத்தல் வைசியர்கட்குப் பண்பேயென்பது.

ஆ:—பசுக்காத்தல் உழவுக்கு இன்றியமையாததாயிருக்கின்றது. எங்ஙனமெனில், எருதுகள் ஏருக்கும் பசுக்கள் பாலுக்கும் * நிரையாக்கலுக்கு முக்கியமானவையாம். இதன்றி கொம்புள்ள மிருகங்களெல்லாம் விவசாயத்தின் ஏருவிற்காகவும் இருவிபக்திரங்களைப்போல உழவுக்கு அத்தியாவசியமென்பதும் சொல்லாமலே விளங்கும்.

மா:—இங்ஙனம் வைசியராம் வேளாளருக்கு ஏதும் வேறு நாமங்கள் உளவோ?

ஆ:—உள.

மா:—அவை யெவை?

ஆ:—தேசகால பேதங்களின்படி வேளாளர்கட்கு பிள்ளைகள், முதலிகள், செட்டிகள் எனவும், வடக்கிலும் வடமேற்கிலும் வேளமரெனவும் வழங்கப்படும். இதற்குப்பிரமாணம் வருமாறு:

## பிள்ளைப் பட்டப்பேருரை.

சேக்கிழார் புராணம்.

இமயமலையரையன் மடமயிலுக்கன்ன பேசுமபர் திருமேனிதழைத்தருளன்று, சமயமனைவயாதிலக்குத் தலைசிறந்தபடி பெட்டிமுக்கிராமிசெல்லும், உமைதிருத்தக்கைகயால்கொடுத்தவாங்கி யுழவுதொழிலாற்பெருக்கியுலகமெல்லாம், தமதுகொழுமிகுதிகொடு வளர்க்கும்வேளாண்டலைவரை, அவ்வம்மையார் தம

* நிரை—பசுமந்தை.

து அருமைத்திருவாக்கினுற், பிள்ளைகளே! யெனவழைக்கப்பட்ட மைகாரணமாக அது பட்டப்பெயராயிற்று.

புராணசாரத்திரட்டில்,

மனிதரிற்றேவராதலின் முதலாம் வருணர்தாமையரேயாகி, இனியபேர்துவும் வேந்தர்மன் விளக்குமியற்கையானிராசரே யெனவும், புவிதைநிர் காமமீட்டுத் தெம்மன்னை புதல்வராய் மென் முதல் பெற்றுத், தனிபறமதலை யாதலான் வேளாண்டலைவர்தாம் பிள்ளையேயெனவும்.

## முதலியார்பட்ட முறை.

சிறொன்றுதேவர்முதலாதலாற் றில்லைவாழ்முதலி
யரென்றநாமம்படைத்தது போன்மற்ற வருமந்தப்
பேரொன்றுபெற்றதுவேளாண் முதன்மை[illegible]பெற்றலவோ
வாமொன்றுபூண்முதலியா யெனிதே தொண்டை[illegible]லமே.

அருண்மொழித்தேவராகிய சேக்கிழார் பெரியபுராணஞ் செய்து அரங்கேற்றியகாலத்து சோழராஜன் முதலிய[illegible]யார் கள் சேக்கிழார் வரவுநோக்கி மிகவியந்து அன்[illegible]தேறு[illegible]எம்முத லிகளோ" என்ற காரணத்தால் அது பட்டப்பெயராயிற்று. முத லி-முதன்மையாதலையுடையவன் என்றபடி.

செட்டிகள்:—செட்டுத் தன்மையையுடைய வியாபாரஞ் செய்தலால் செட்டிகளென்னும் பட்டப்பெயர் வந்தது. என்க.

## வேளாண் மாந்தரது பூர்வபட்ட விவரணம்.

மேற்கூறிப்போந்த மூவகைச்சிறப்புப் பட்டப்பெயர்கள் வழங்கத்தலைப்பட்ட காலத்துக்கு முன்னே நிலத்துரிமை, வைசிய ராகிய வேளாளர்க்குடைமையால் அதுகாரணமாக "கிழார்" என்



னும் பட்டப்பெயரும் வழங்கிற்றென்க. கிழார் என்பதன்பொ ருள் உரிமையாளர் என்பது. (கிழமை—உரிமை) இங்கே அக் கிழமையென்னும் பண்புப்பெயர் இறுதி மை விகுதியும் இடை அகரவுயிருங்கெட்டு ஆர் என்னும் உயர்திணைப் படர்க்கைப்பன் மை விகுதிபுணர்ந்து கிழார் என முடிந்ததென்க.

## கிழார்பட்டம் வழங்கிய காலம்.

இப்பட்டப்பெயர் பன்னெடுங்காலத்துக்கு முன்பே வழங் கிவந்ததென்க. என்னெனில், கடைச்சங்கவாணர்கள் நாற்பத் தொன்பதின்மருள் கூடலூர்க்கிழார், அரிசிற்கிழார், சேக்கிழார், பாக்கிழார் என்பாராலும் இனிதுவிளங்கும். இவ்வுண்மை யுண ராத போலிமாந்தர் சிலர் அழுக்காறு முதலிய காரணமாக வேறுபொருள் கூறியும் புலம்பாநிற்பர். ஆகவே இவ்வேளாள வைசியர்கட்கு உரிமையாகவும் கிழார்பட்டம் 2500 வருடங் கட்கு முன்னரிருந்ததென்றும், வேளாளரும் அவ்வளவு பூர்வ காலத்திருந்தே வருகின்றாரென்றும் இனிது விளங்குகின்

மா:—இனி இவ்வைசிய வேளாளமாந்தர்கட்கு மேற்கூறிய பல்வகைப்பட்டப்பெயர்கள் பூர்வம் வழக்கிலிருக்க இப்போது பெரும்பாலும் அவைமறைந்து செட்டியார், முதலியார், பிள்ளை மார் என்னும் இம்மூன்று நாமங்களே மிகுந்தும் இவற்றுள்ளும் முதலியார், பிள்ளைமார் என்ற பட்டங்களே விசேடமாயும், இவ் விருவருள்ளும் பிள்ளைப்பட்டதாரிகளே மிகுதியுடையாராயும் கா ணப்படுகின்றதே; இதனால் அப்பிள்ளைப்பட்டத்துக்கு ஏதோ ஓர் விசேடமிருக்கவேண்டுமென நினைப்புறுகின்றேன்.

## பிள்ளைப் பட்டப் பெருமை.

ஆ:—ஆம், நீர் நினைத்தபடி விசேடமுண்டு. பூர்வம் சீர்காழி யென்னும் திவ்யக்ஷேத்திரத்திலே சிவபாதவிருதயர்க்கும் பக

வதியார்க்கும் தவப்பயனுயவதரித்த ஸ்ரீஞானசம்பந்தசுவாமிகள் தமது மூன்றாம்வயதிலே பிதாவோடு சிவகெங்கையையடைந்து ஆங்கே தம்மைத் தீர்த்தக்கரையினிறுத்திப் பிதா ஸ்நானஞ்செய்து எழுமுன் தம் பரமபிதாவாகிய சிவபெருமானைவிட்டு நீங்கி நெடுநாளாயிற்றென்னுங் கருத்தோடு தோணியப்பராலயத்தை நோக்கி யழாநிற்க, அஃதுணர்ந்த ஸ்ரீ சிவபிரான் பார்வதிதேவியாரோடும் இடபாரூடராயெழுந்தருளி அவரையடுத்து பார்வதிதேவியாரை நோக்க, உடனே அவ்வம்மை பிள்ளையாரது அழுகைக்காற்றாது திருவுளமிரங்கி பொற்கிண்ணத்திலே திருமுலைப்பாலைக் கறந்து ஞானமிர்தமுங்கூட்டி யூட்டியஅப்பரமதயாளுவே ஓர்கால் காஞ்சி காமகோட்டத்திலே காமாக்ஷி யென்னுந் திருநாமத்தனாய் அறுசமயத்தாரும் உடலோம்பற் காரணமாகத் தமதிறைவரால் தந்தருளப்பட்ட எட்டுக்கிராமி நெல் விரையையும் பெற்று ஆங்குள்ள வேளாளர்களை நோக்கி எமதருமைப்பிள்ளைகாள்! நீவிர் இதனைப்பெற்று விருத்திசெய்து லாற்பெருக்கி உலகுயிர்க்குறுதவிநீரும் உய்ப்பக்கடவீர்கள் என்றருளிச்செய்த திருவாசகமுந் தொடுத்தபிள்ளைப் பட்டமன்றோ! ஏ மாணவ! இதன்பெருமை யாவரறியார்; எவர்க்கும் தெரிந்ததாலது! இத்தகையபெருந் தெய்வமளித்த இப்பிள்ளைப்பட்டம் நமது பரமகுருவாகிய அருணகிரியாரால் அருட்டிருவாக்காலழைக்கப்பட்டமையாலே ஏனையோரால் தத்த பல்வகைப்பெயர்கட்கும் மேம்பாடாய் விளங்கியோங்குகின்றது. இதுவே மத்தியகாலத்திற்றோன்றிய சுனின கீழ்க்குடிச்சாதியாருட் சிலர் அக்ரேணியாபிள்ளை, அதிசயம் பிள்ளை, பாக்கியம்பிள்ளை. முதலியனபோன்றும், மற்றும் சங்கராஜாதியர்களிற் சிலரும் தங்கடங்கள் சனஜாதித்தன்மையை யொளிக்குமாறு இவ்வருட்பட்டத்தைத் தரித்துக்கொள்கின்றார்கள். இவர்கள் இங்ஙனம் போலிப்பட்டத்துக் காசைகொண்டதாலன்றோ உண்மையறியாச்சாமானிய உலுத்த புத்தியினர் "சாதியில் கெட்டவன்வேளாளன் கதியில் கெட்டது கத்தரிக்கா" யென்பர். ஆயினும் இஃது நம் புராதன எதார்த்த வைசிய வேளாளர்களை ஒருபோதும் சாராதென்க.



மா:—அறிந்தனன்; ஆயினும் இவ்வேளாண்மாக்கள் இத்தகையினரென்பதைப்பற்றி வேறைய தொல்லாசிரியர்களால் சொல்லானின்னதேனும் தயவுகூர்ந்து சற்று எடுத்தோதப் பிரார்த்திக்கின்றனன்.

### தொல்காப்பிய மரபியல்.

ஆ:—"வைசியன்பெறுமே வாணிபவாழ்க்கை" எனவும், "மெய்தெரிவகையின் எண்வகையுணவின் செய்தியும் வரையாரப்பாலான" என்னுங் கூறிமொழியாது "வேளாண்மாந்தர்க்குழுதானல்லதில்லெனமொழிப பிறவகைநிகழ்ச்சி" என்னுங் கொடை ...க்காரணங்கட்டு ஆசிரியர் தொல்காப்பியனாரும் விதந்தனர்க.

## வேளாளரது சிறப்பியல்.

### திருக்கை வழக்கம்.

அழவர்க்குச்செம்பொனளிக்குங்கையாகமங்கள்
வேதபுராணங்கள்விரிக்குங்கை—தீதிகெடு
காலங்குலங்கள்னைத்துமுடையை
தானத்தருமத்தைமுற்றுக்குங்கை—யானதமிழ்
கல்லார்களைன்றுமகத்திற்கொள்ளுமல்
எல்லாரையுங்காத்திடற்றுங்கை—வல்லமைசேர்
மைப்பாமுகிலுலகைவாழ்விக்குமென்மைபோல்
கைம்மாறிலாதளிக்குங்கற்பகக்கை—கைம்மையா
லுருணிர்போனலகத்தவர்க்கெல்லாம்
பேர்தெவரியும்பிரதாபக்கை—பாரில்
உடுக்கையிழந்தவன்கைபோலவாங்கே
கொடுக்கவிசைத்தருளிக்கை—யிடுக்கணிறல்
மாமறையோர்மன்னரொடுவந்தடுத்தருத்திரருக்
தாமவியாமற்கொடுத்தாக்குங்கை—தேமருவும்
பொன்முடிமன்னர்புனைமுடித்தரிக்குங்கை
மன்னர்பிரபாரத்தளக்குங்கை—தன்னயத்து என்றபடி.

இதேதன்றியும் குலோத்துங்கமகாராஜன் கம்பரைச் சீறிய போது அவர் கொடுத்திருந்த விருதுகளைச் சபையின்கண்ணே அவிழ்த்துவைத்து, ஏ ராஜனே! "உம்மைக்கண்டோ நான் தமிழ்ப்பாடலைப்பாடினேன்; வேளாளரைப் பாடியவாயால் வேந்தரைப் பாடுவதில்லையென்பது என் சங்கேதமென்று உமக்குத்தெரியாதா" என்றார். இதன் விரிவு புலவர்பிரதாபங்கூறும் விநோதரசமஞ்சரியிற் காண்க.

மா:—அறிந்தேன்; இக்கம்பர் இப்பெருமையுடையவர் என்பதை எனக்குக் கிருபைகூர்ந் தருள்வீர்களாக.

## கம்பர் சரித்திரச் சுருக்கம்.

ஆ:—கம்பர் ஏறக்குறைய 1000 த்துக்கு மேற்பட்ட வருஷங்களுக்கு முன்னே திருவழுந்தூரிற் பிறந்து காளியின் அருளால் வெண்ணெய் நல்லூர்ச் சடையப்பமுதலியார் வீட்டில் வளர்ந்து மாடு மேய்த்தற்றொழில் செய்துவந்தனர். ஒருநாள் இவர் வயிரபுரமென்னும் ஊரில் கம்புந் தினையும் விதைத்த வயலைக்காத்திருந்து 15 நாழிகைக்குமேல் நித்திரைபிறந்து அருகிருந்த காளிகோவிலில் உறங்கினர். பின்பு இவ்வயலைக் குதிரைமேய்வதாகக் கனவுகண்டெழுந்துபோய்ப் பார்க்கவே அங்ஙனமே மேய்ந்து கொண்டிருந்தது. அதுகண்டு குதிரையை அதட்டியும் போகாமையால் மீளவும் அக்கோவிலெதிர்சென்று அழுதிரக்க, காளி உள்ளமிரங்கிப் பீஜாக்ஷரத்தை நாவிலெழுதிப் பிரசாதிக்கவே சரஸ்வதி வரம்பெற்று ஓர் கவிபாடிக் குதிரையைக்கொன்றும், மீளவும் அக்குதிரை அவ்வூர் அதிகாரியாகிய காளிங்கராயனுடையதாதலால் யாவரும் கேட்டுக்கொண்டபடி அக்கவியின் ஈற்றடியை மாற்றிப்பாடி உயிர்ப்பித்தனர். இதையறிந்த சடையப்பமுதலியாரும் துங்கனென்னும் சோழராஜனும் அவன் மகனாகிய குலோத்துங்கசோழனும் விசேஷமாகச் சன்மானித்துவந்தனர். அதன்பின்னர் முதலியாரும் அரசனும் கேட்டுக்கொள்ள இராமாயணம்பாடித் தில்லை மூவாயிரவர் முதலியோர் கை



யொப்பமும்பெற்று ஸ்ரீரங்கத்தில் ஸ்ரீ ரெங்கநாதர் சந்நிதியில் அரங்கேற்றி வாழ்ந்திருந்தனர் என்பதாம். பின்னுங்கேட்பாய்

பாணியிற்கங்கைநதி மணியிற்றகைமேவு
பாரமுனிற் றண்டகம்
பழமொழியிலெளவைசொல் லரசிற்சேரமான்
பத்தியிற்சிறியதொண்டன்
காளியிற்றுண்டையாம் புகழில்வேளாளர்புகழ்
கான்முனியிற்பிரதன் என்பதனுலும் இனிது

விளங்கும். மற்ற அரசர்களைப்போல இவர்கட்குந் தசாங்க முதலிய விருதுகளுமுண்டு. அவைவருமாறு காண்க:—பெயர் வேளாளர், மலை-மகமேரு, ஆறு-கங்கை, நாடு-ஏகு, நகர்-999 வாகனம்-ஐராவதயானையும், உச்சைச்சிரவக்குதிரையும், மாலை செங்குவளை, கொடி-மேழி-சிங்கம்-குதிரை படை-கலப்பை, முரசம் கொடை. இவற்றுக்குச் செய்யுட்பிரமாணம் வருமாறு காண்க:—

புராணசார திரட்டு

செகதீர்வேலிப்புரவிபோர்த்த.
மன்னுயிரெலாக்குந்தன் வயத்ததாகுங்
கொடைமடக்குறித்தகொள் மையராஜனின்
வேளாளரென்னவியத்தருபெயரும்
வருணமாச்சிரமவைக்குள்ளனிற்கலி
திருவிலவிலைத்தவிந்திகழ்மேருமலையும்
நல்குரவொழிப்பல்வளம்பரப்பி
அறக்கடைநிறுத்தியவினைத்தையும்புனிதஞ்
செய்தலிற்கங்கைத்திருப்பேராறும்
கோடாமரபின்வாடாமையின்
மன்னரைக்காக்குநாடெருபாறென்பதும்
அன்னவர்க்காக்கமுன்னியநகர
மொன்றொழியாயிரமென்றுமித்திறத்
தின்முனிவார்நிகந்ததாடென்பு
அமுதவன்முடிபெறத்தமராவாரனைமுன்
சட்டாரோடிகலின்பெறவளிப்ப
காரணனிசைத்தவெள்வாரணக்குரகத

ஊர்தியுந்தொழிற்றிறமுறுகளாக்கருவித்
தாவறக்காட்டுந்தனிக்குழிகொடிபாகு
சிங்கக்குழிகொடுதிங்கட்குடைமேழியும்
பொழுதளவறுக்கும்விழுமியகுழியிற்
றிக்கினோர்மலர்ச்செங்குவளைத்தாருங்
கவிப்பகைதெறுபடையுழப்படையா நவும்
ஆலவிளிக்குமருட்கொடைமுரசமெனச்
சீரியற்றசாங்கமார்கவிபுகைத்து
வானவர்மன்னர்வரிசையின்வழங்கத்
தம்பியல்விளக்கவம்மூன்றுமவருணர்
செம்மைசிறொன்றுதிகழ்தகவெங்கணுமெனா என்றபடி.

## வேளாளர்க்குதிருத்தலளவைப்பூர்விக சுதந்தர மென்பது.

தல்பாகம் புராணசாரத்திரட்டு.

அண்டவிக்குப் பலிதுக்கு மக்களுள குறைட்சி
கண்டன் மறைக்கோவனை திருத்து மூன்னாம் பின்னும் காசினியில்
மன்டுபுகழான் புரூரவனும் மன்னன் வரனோர் மகட்புணர்ந்தோம்
விண்டுபோகத்தலைக்குத்திதிருத்தார்வேளாண்மைமந்தர் தம்பேர்.

என்னுமிச்செய்யுளால் வேளாளர் பண்டைக்காலத்தும் திருத்தல் முகத்தல் முதலிய அளவைகளைத் தமது சுதந்தரத்திலேயுடைய கௌரவமான வர்த்தகக் கூட்டத்தினராயும் வாழ்ந்து வந்ததாகவே தெரியவருகின்றது. இன்னும்,

## சோமசுந்தரபாண்டியர்க்கு வேளாளர் மகுடஞ்சூட்டின ரென்பது.

மதுராபுரியிலே அரசியாய் விளங்கும் ஒப்பருங் கடவுளாகிய ஸ்ரீ சொக்கலிங்கப்பெருமானது திவ்ய திருக்கோலமென்று



சொல்லப்பட்ட சோமசுந்தர பாண்டியனென்னு மரசனுக்குப் பட்டாபிஷேகஞ்செய்யக்காலத்தில் அவருக்கு யாவர் முடிசூட்டத் தக்கவர்களென்னும் விசாரம்வந்தபோது, பலவகையாராய்ச்சியாலும் மக்களுயிர்க்கு உறுதித்துணையாகவிருக்கும் வேளாளருள் ஒருவர் அம்மகோற்சவத்தை நிறைவேற்றத்தக்கவரென்று யாவராலுஞ் சம்மதிக்கப்பட்டதென ஆலாஸ்யபுராணத்தால் ஏற்படுகின்றது.

வினா :—அஃதிங்ஙனம், இத்தகைய வேளாளருக்கு மேலவர்களான பிரம்ம, க்ஷத்திரியர்களென்னும் இருவருளொருவரையும் விட்டுச் சூத்திர உழவர்களை யேன் அவ்வாறு முடிசூட்ட உத்தேசித்தனர்? இதற்கு ஏதும் காரணமிருத்தல்வேண்டுமென நினைக்கின்றேன். அங்ஙனமிருப்பின் தயைசெய்யவேண்டும்.

## வேளாளர் மகுடஞ்சூட்டும் விசேடம்

விடை :—கூறுதும், வைசியரென்னும் வேளாண்மரபினர் பிரமனது துடையிற் றோன்றியதால் அரசாளுதற்கு உறுதி செய்யத்தக்கவர்களென்கிற காரணத்தாலும், மற்றும் பிராமண க்ஷத்திரிய சூத்திரர்கள் பட்டாபிஷேக விதானமையொண்டுமே அவர்களைவிட்டு சுதந்திர ஜீவிகர்களான வைசிய வேளாண்மரபினரை விரும்பினரென்க.

பூர்வம் ஸ்ரீராமபிரானுக்கு மகுடாபிஷேகஞ் செய்தபோது வேளாண்டலைவராவாரொருவர் அம்மகுடத்தினை எடுத்துக்கொடுக்க வசிட்டரேற்று முடிசூட்டினதாகக் கம்பராமாயணத்தானும் இனிது விளங்குகின்றது.

கம்பராமாயணம்.

அரியணை யநுமன்றாங்க வங்கதனுடை வாளேந்தப்
பரதன் வெண்குடை கவிக்க விருவருங் கவரிவீச
விரைசெறி குழலியோங்க வெண்ணெய்யூர்ச்சடையன்றங்கள்
மரபுளோர் கொடுக்கவாங்கி வசிட்டனே புனைந்தான்மௌலி.

மாண :—ஐய, சாற்றிய ஆனர்த்தனன் பூர்வம் சற்றேறக்குறைய 2500 வருஷங்களுக்கு முன்னே விளங்கிய கடைச்சங்கமிருந்து தமிழாராய்ந்த பெரும்புலமையில்லாப்புலவர் குழாங்களுள் ஒருவராய தெய்வப் புலமைத் திருவள்ளுவனார், எம்மதத்தார்க்குஞ் சம்மதமாயும், எச்சாதியாருமெச்சலின்ற உச்சிதமாய் அருளிச்செய்த திருக்குறட்பொதுமறையுள் எதும் இவ்வேளாண்மாக்களைச் சிறப்பித்துளதாயின் எனக் கெடுத்தோதுவீர்களாக.

---

# வேளாளரது உழவின் விசேடம்.

---

தேவர்குறள் 104-ம் அதிகாரம்—உழவு.

ஆசி.—உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாந்
தொழுதுண்டு பின் செல்பவர்.

(இ-ள்) பரிமேலழகர் :—உழுது உண்டு வாழ்வாரே வாழ்வார்—யாவரும் உண்ணும் வகையான் உழுதலைச் செய்து அதனாற்றம்முயிரோம்பி வாழ்கின்றாரே தமக்குரியராய் வாழ்கின்றவர். மற்றெல்லாம் தொழுது உண்டு பின்செல்பவர்—மற்றையோரெல்லாம் பிறரைத்தொழுது அதனாற்றம்முயிரோம்பி அவரைப் பின்செல்கின்றவர் எ-று.

தாமுமக்கட் பிறப்பினராயிருந்து பிறரைத் தொழுது அவரிலசொல்பொறுத் தம்முயிரோம்பி அவர்பின் செல்வார் தமக்குரியரல்லரென்பது கருத்து.

சுழன்று மேர்ப்பின்ன துலக மதனு
லுழந்து முழவே தலை.

(இ-ள்.) சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம்—உழுதலான் வரும் மெய்வருத்த நோக்கிப் பிறதொழில்களைச் செய்து திரிந்தும், முடிவில் ஏருடையார்வழியதாயிற்று உலகம்; அதனால் உழந்தும் உழவே தலை—ஆதலான் எல்லா வருத்த முற்றும் தலையாய தொழில் உழவே எ-று.



உழுவா ருலகத்தார்க் காணியஃ தாற்றா
தெழுவாரை யெல்லாம் பொறுத்து.

(இ-ள்.) அஃது ஆற்றாது எழுவாரை எல்லாம் பொறுத்து—அவ் வுழுதலைச் செய்யமாட்டாது பிற தொழில்களின்மேற் செல்வார் யாவரையும் தாங்குதலால், உழுவார் உலகத்தார்க்கு ஆணி—அவ்வுழுவார் உலகத்தாராகிய தேர்க்கு அச்சாணியாவர் எ-று. உழுவாரென்றது உழுவிப்பார் மேலுஞ் செல்லும்.

பலகுடை நீழலுந் தங்குடைக் கீழ்க் காண்ப
ரலகுடை நீழ லவர்.

(இ-ள்) அலகு உடை நீழலவர்—உழுதற்றொழிலான் நெல்லினை யுடையராய தண்ணளியுடையோர், பலகுடை நீழலும் தங்குடைக்கீழ்க் காண்பர்—பலவேந்தர் குடை நிழலதாய மண் முழுதினையுந் தம்வேந்தர் குடைக்கீழே காண்பர் எ-று.

அலகு உடைநீழலவர் தங்குடைக்கீழ் காண்பர்—தம்மரசனுக்குக் கொற்றம் பெருக்கி மண் முழுதும் அவனதாகச் செய்குவப்பரென்பதாம். இரப்போர் சுற்றமும் புரப்போர் கொற்றமும் உழவிடை விளைப்போர் என்றார் பிறரும்.

உழவினார் கைம்மடங்கி னில்லை விழைவதூஉம்
விட்டேமென் பார்க்கு நிலை.

(இ-ள்.) உழவினார் கைம்மடங்கின் :—உழுதலையுடையார் கை அதனைச் செய்யாது மடங்குமாயின், விழைவதூஉம் விட்டேம் என்பார்க்கு நிலை இல்லை—யாவரும் விழைவு துணையும் யாந்துறந்தோமென்பார்க்கு அவ்வறத்தின்கணிற்றலு முளவாகா எ-று.

உழவர்க்கு உறுப்பாய கை வாளா விருப்பின் உலகத்து இம்மை மறுமை வீடென்னும் பயன்கள் நிகழாவென்பதாம்.

இன்னும், 1000 ஆண்டுகளுக்கு முன்னே சைவத்தியானம் சிவபூசை முதலியன வியற்றி நீண்டகாலம் தேகத்தோடிருந்தசற்றில் ஸ்ரீவிநாயகக்கடவுள் கிருபா விசேடத்தால் திருக்கைலாயநாதரைச் சேவித்திருந்த ஔவையாரும் தமது ஆத்திசூடியே

சீரைத்தேடி ஏரைத்தேடு
செழிச்செல்வம் கேடுபடாது
தொழுதுண்கை வழுதுண்ணிரு. என்றும்,

நல்வழியில்

ஆற்றங்கரையின் மரமு மரசறிய
வீற்றிருந்த வாழ்வும் விழுமன்றே—ஏற்றம்
உழுதுண்டு வாழ்வதற்கொப்பில்லைகண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு.

என்றுமிவ்வாக்கியங்களால் வேளாண்மாக்களின் பயிர்செய்தற் றொழிலின் மிக மேன்மையுமென்னும், அதனால் அவர்க்குயர்வும் விளங்குகின்றது. இவை மட்டோ பின்னும்.

குருபாததாசர்செய்த குமரேச சதகத்தில்

மேழிதொழுவைப் பூசனைகொடுப்பதும்
காடோறு மழைபொழிவதும்
நாட்டுக்கு மன்னர்கள் மாதவம் புரிவதும்
கல்வியும் வேதியர்க்கு
சொல்லிய யாகாதி கருமங்கள் செய்வதும்
தொல்புவி செழிக்குங் கவழுந்
சுபசோபனங்களும் வீரர்களின் செங்கோ
லாங்கு மறுநெறி முறைமையும்
வெல்லச் சுரந்தமொழி வர்த்தகர் கொள்வினை
விற்பனையு மிக புகழு
மிக்கவதி காரமும் தொழிலாளர் சேவையும்
வீரனை ஆராவியும்
வல்லமைகள் சகலமும் வேளாளர் மேழியின்
வாழ்வினால் விளைவனன்றோ

என்றுமிச் செய்யுளாலும், அம்பலவாணக் கவிராயர் பாடிய
அறப்பளீசுர சதகத்தில்

பாரதிக் கருப்புரவனுமல் வேதிய
ரியற்றிநல்லேர் பெறுவதும்



இராச்சியபாரஞ் செய்யுமுடிமன்னர் வெற்றிகொண்
டிடங்ங நல்லேர் பெறுவதும்
வணிகர் தம்மோது தனதானியத்தேடி
வசியர் நல்லேர் பெறுவதும்
மற்றுமுள பேர்களை மிடிதீர்ந்திடாதடிக்
வளமை பெற்றோர் பெறுவதும்
திசைதோறுமுள்ளபல தேவர்க்கும் பூசை
செய்ய நல்லேர் பெறுவதுஞ்
சீர்கொண்ட மைப்புயலிற் மாவெதின் வேளாளர்
செய்யுமேழிப் பெருமையாலே.

என்றுமிச் செய்யுளாலும், இன்னும் பற்பல நூல்களிற்கூறிப் போந்த வாக்கியங்களாலும் இவ்வேளாண்மரபினர் மிக்கதோர் பூர்விக சுதந்திர சிறப்புடைச் செல்வர்களென்றே தெரிகுவாயாக. இதற்குச் சான்றாக,

தொழுங்குலத்திற் பிறந்தாரோ சடர்முடிமன்னவராகி
யெழுங்குலத்திற் பிறந்தாரோ வணிகர்க்குப்பின் வணிகரானார்
செழுங்குலத்திற் பிறந்தாரோ சிறப்புடைய ராஜனென
உழுங்குலத்திற் பிறந்தாரே யுலகுய்யப் பிறந்தார்கள். என்று கல்வியிற் பெரியகம்பருங் கூறலாயினர்.

மாணாக்கன்:—ஆம் அறிந்தனன்; ஐய! இப்பெருஞ் சிறந்த சிறப்பும் அருமையும் பெருமையும் வாய்ந்துள்ளோர் பூர்வம் நிலவரமாய் வசித்த நாடு நகரங்களின் விவரங்களும் மற்றும் கோத்திர சந்ததியைப் பற்றியும் தக்க பிரமாண பூர்வமாக எடுத்தோதப் பிரார்த்திக்கிறேன்.

## வேளாளரது நாடுநகர கோத்திர சந்ததியை.

[illegible]

ஆதிசீர்கொண்ட தொண்டமண்டலமிருபத்துநான்கு
செப்பிடுங் கோட்டமவையிற்
சேருமெழுபத்தொன்பதாகு நாடுகளில்
தேசநான்கு [illegible]

பாங்கொண்ட கோத்திரம் பன்னீராயிரமுன்
பகர்ந்த பட்டயமுள்ளதிப்
பட்டயத்தனிசிலையுள்ளபடி குன்றேனுர்
பகர்ந்திடு மூர்களவையில்
ஏர்கொண்ட வூமிசெய வாய்க்காதிரைவிசை
வேலை யிழுதைத் தொண்டதோ
வேந்தரசர் நாட்டிடத் தொழிட்டதோலாவது
மேடாய் வளர்த்து ...வோ
கார்கொண்ட நீர்கொண்டு பண்வையுரியாயவோ
கழுதுமிவ்வூர் களெல்லாம்,
கச்சியிற் கல்வெட்டு செப்பேட்டி லுளவென்று
கற்ற நாவலர் சொன்னதே.

தொட்டமோ திருபாற்றென்று கூறுகா லெழுபத் தொன்பான்
ஒட்டெழு லாயிரத்துத் தொளாயிர நக்கமாகும்
ஒட்டெழு கோத்திரங்கள் சகத்திரம் பன்னிரண்டாம்
நாட்டில் வேளாளர் தம்மை நவின்றிட வடங்காலக்கம்.

சேக்கிழார் புராணம்.

காடெங்குஞ் சோழன் முனைக்கெரிந்தே யேற்று
நற்குடி நாற்பத் தெண்ணாயிரத்துவந்த
கூடல்கிழான் புரிசைகிழான் குலவுசீர்வெண்
குளப்பாக்கிழான் வரிசைக் குலத்துழான்முன்
தேடுபுகழார்வருஞ் சிறந்துவாழச்
சேக்கிழார் குடியிலிக்கத் தேசமுய்யப்
பாடல்புரி யருண்மொழித் தேவரும் பினந்தப்
பாலறு வாயரும் வந்துதித்து வாழ்ந்தார்.

மா :—இது நிற்க; நாட்டிற் சிறந்த நற்குடியாய வேளாண் மாக்கள் கார்காத்தவேளாளர், காணக்கிளிநாட்டுவேளாளர், வள்வளநாட்டுவேளாளர் *சோழநாட்டுவேளாளர், பாண்டிநாட்டு வேளாளர், தொண்டமண்டலவேளாளர், துளுவவேளாளர், நீறுபூசியவேளாளர், வீரசைவவேளாளர் முதலிய இன்னும் பல பிரிவினராய்க் காணப்படுகின்றார்களே! இவர்கள் இவ்வாறு பல

*சோழநாட்டுவேளாளர் - சோழியரெனப்படுவார்.



படப்பிரிந்ததற்குக் காரணந் தெரிகிலேன். ஆகையால் அருள் செய்யவும்.

## வேளாள் பிரிவின் விவரணம்.

ஆசி :—மேலே காட்டிய செய்யுட் பிரகாரம் 24 கோட்டம், 79 நாடு, 1900 சிற்றூர்களினின்று 12000 கோத்திரபூர்வமாய் வாழ்ந்து வந்தனரன்றோ! இவ்வாறு வாழ்நாட்களுக்குள் காலீ சிற்சிலர் வசதிகாரணமாகவும், பலர் பயிர்ச்செயல் சௌகரியத்தமாகவும், மற்றுஞ் சிலர் காலவேறுபாடு காரணமாகவும், இன்னுஞ் சிலர் அரசுரிமைக்கு அஞ்சியோடியும், பின்னும் பலர் தொழில் வேறுபாடு நோக்கியும் பலவேறு திசைகளை நோக்கிச் சென்று ஆங்காங்கே நிலைத்தமை கொண்டுமே அந்தந்த நாட்டின் காரணப்பெயராய் வழங்கத்தலைப்பட்டதாகத் தெரிகிறது. ஆகவே வழிமுறைப்படி முறையாய் வந்த பூர்வ யதார்த்த வைசியவேளாள மரபினரிவரேயல்லது வேறல. ஆனால் மேலேகூறிய வேளாளர்களுள் நீறுபூசிய வேளாளரென்பார், பூர்வம் மதுராபுரியிலே ஸ்ரீ ஞானசம்பந்த சுவாமிகள் சமணரை வாதில்வென்று கழுவேற்றத் துணிந்தபோது அவர்களிற் பலர் பயந்து விபூதி ருத்திராக்ஷத் தரித்துக்கொண்டு சிவமதத்தவர்களாய் பலவேறு திசைகளிற் சென்று வாழ்கின்ற அக்காரணத்தால் அப்பெயர் வழங்கத்தலைப் பட்டதாம். மற்றும் வீரசைவவேளாளரென்பார், ஆதிகாலத்தில் ஸ்ரீ சுப்பிரமணியக்கடவுள் சூரனை சம்ஹாரிக்கத் தமக்குப் பிற்படையாக்கொண்ட நவவீரர்களின் வழிவந்தவராகலின் அப்பெயர் வழங்குவதென ஓர் சாராரும், ஸ்ரீ அகோரவீரபத்திரர்க்கு அடிமை பூண்டு தொண்டுபுரிந்தவரும் மரபுநோக்கி அப்பெயர் வழங்குவதென சிலருங்கூறத் தெரிகிறது. பிறவுங்கூறுவாருளர்.

இப்போது மேற்கண்ட பிரிவினர் பலருள்ளும் சிலர் சைவாசாரத்தால் மேன்மையையும், சிலர் அசைவாசாரத்தால் தாழ்மையையும், சிலர் திரவியமிகுதியாலும், சிலர் நாகரீகத்தாலும் சிலர் கல்வித்திறமையாலும், சிலர் தேகப்பொலிவினாலும், மற்றுஞ் சிலர் உத்தியோக மதிப்பினாலும் வெவ்வேறு பிரிவினராய்.

காணப்படினும் நன் காய்கொடுத்து சுற்றில் ஒவ்வொருவரும் அவ்வோர் விசேடம்பற்றிக் கொள்ளல்கொளற்குரித்தாய்க் கொண்டே வருகின்றனர். ஓர் மாமரமானது பத்திற்றொன்றிய பல வகைக் கொம்பு கிளைகளையும் ஒன்றுக்கொன்று சிறிது பெரிதாகவும், சில கொம்பின் கனி இனிப்பாகவும் சில கிளைகளின் கனி புளிப்பாகவும் அமைந்திருப்பினும் இனமாறுதலுடைய தில்லையன்றோ? அதே போன்று மேற்கண்ட வைசிய வேளாண் மாக்கள் மேற்கூறிய பல்வகைக்காரணத்தின் பல பிரிவாகக் காணப்படினும் யாவர்க்கும் மாறுபாடின்றி இல்லது வேறன்றென்க.

## வேளாளரைச்சிலர் சூத்திரரென்பதின் விவரணம்.

மாணவன்:—மாசிலாதருளும் தேசிகமணியே! தேவரீர் திருவாய்மலர்ந்தனவறிந்தேன். இப்போது நம் நாட்டில் வாழும் வேளாளர்களுட் பலரைச் சுயம்சேர்ந்ததி விசாரணைக்கால், அவர்கள் தங்களைச் சூத்திரரென்றே கூறுகின்றார்கள். இவர்கள்தான் இவ்வாறு கூறுகின்றார்களென்றால், பிராமணர்களும் இவர்களைச்சூத்திரர் என்று ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் நிச்சிஷ்டம் செய்கின்றார்கள். இதன் விவரமென்னை? அருள் செய்யப் பிரார்த்திக்கிறேன்.

ஆசி:— சீட, நீ எந்த வேளாளனைக் கேட்டனையோ அவன் தன்னைச் சூத்திரன் என்று கூறியதுண்மையே, எங்ஙனமெனில், அவன் உள்ளபடியே வேளாளனாயிருந்தும் தன்னை யின்னவன் என்று அறிந்துகொள்ளும் கல்வியறிவொழுக்கமில்லாத மந்தமதியினனென்பது சொல்லாமலே அமையும். அவ்வாறு கூறிய பாமரனது அழுக்குவாயினின்றும் வழுக்கி யொழுகிய இழுக்குரையை ஓர்பொருட்டாக வெண்ணற்க. ஏனெனில், ஷையார்களுட் பல்லோர் தாங்கள் வந்த வருணாச்சிரமதருமமின்னவையென்று அறிந்துகொள்ளப் போதுமான கல்வியறிவு குறைந்தும், அஃதுள்ளாரைச் செறிந்து கேள்வியாலறியும் ஆற்



றலாற்று ஒருமைப் பாடில்லாமை, தீநெறியொழுக்கம், அந்நிய பழக்க முடைமை முதலியவைகளால் சிறந்தொழுகுதலைக் குறைந்தும், நாத்திகமேலிட்டும் சோம்பலுற்றிருக்கும் வறுமையில் மெலிந்தும் ஒன்றுமறியா மடத்தன்மையடைந்து பிணைப்போன்றும், நாடகப்பாத்திரமயோனாயும் விளங்குகின்றார்களென்க.

## வேளாளரைச்சில பிராமணர் சூத்திரரெனல்.

பிராமணர் கூறுவதென்னையோவெனின், கூறுதும்:- பிரம்ம க்ஷத்திரிய வைசிய சூத்திரரென்னும் சதுர்வர்ணத்தோடு நிற்கவில்லை. இப்போதைய கலியுகப்பெருமான் உற்சவ விசேடத்தால் நான்கு வருணமும் நன்னான்கு வருணங்களாயின. அஃதெங்ஙனமெனில், பிராமணர்களில் பிராமணர், பிராமணர்களில் க்ஷத்திரியர், பிராமணர்களில் வைசியர், பிராமணர்களில் சூத்திரர் என இவ்வாறாகவும் மற்ற மூன்று வருணத்தார்களிலும் கர்மாநுஷ்டானத்தாழ்வினால் காணப்படுகின்றார்கள். இவ்வாறு காணப்பட்ட பிராமணர்களில் தமது உயர்வருணத்துக்கேற்ப பிராமணிகம் அதாவது அந்த வருணாசிரம தருமமாகிய வேதம் ஓதல் ஓதுவித்தல், யாகம் செய்தல் செய்வித்தல், தானங்கொடுத்தல் வாங்குதல் முதலியனவும் மற்றும் நித்திய கருமாநுஷ்டானம் காயத்திரி ஜெபம் என்னுமிவைகளைக் கனவிலும் கண்டும் கேட்டும் செய்துமறியாதுள்ள பிராமணர்கள் எவ்வளவோ பெயரிருக்கின்றார்கள். இங்ஙனம் இவர்கள் தங்களொழுக்கயோக்கியதையே ஒரு சிறிதுமுணராத சாமானிய பிராமண சூத்திரர்கள் எங்ஙனம் பிறவருணத்தாரது சரித்திர உண்மையை உள்ளபடி யறிந்திருக்கப்போகின்றார்கள், ஆகவே கல்வியறிவொழுக்கமில்லாத சில போலிப்பிராமணர்கள் கூறுவதைக் குப்பைக் கூளமெனத் தள்ளுக.

மா:- கல்வியறிவொழுக்க மில்லாத காரணத்தானே அவரைச் சூத்திரரெனக் கூறலாமோ?

ஆ:—அழுக்கா றுடையான்க ணாக்கம்போன் றில்லை
யொழுக்க மிலான்க ணுயர்வு.

ஒழுக்க முடைமை குடிமை யிழுக்க
மிழிந்த பிறப்பாய் விடும்.
மறப்பினு *மோத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப்பொழுக்கங் குன்றக் கெடும்.

என்ற குறட் பாக்களானும், [வேளா
நாற்பாற்குலத்தின் மேற்பாலொருவன் கற்றிலனாயிற் கீழிருப்பவ கல்லாவொருவன் குலநலம்பேசுதல் நெல்லினுட்பிறந்த பதராகும் மே. என்ற மதிவல்லோர் வாக்கானும் வெளிப்படும்.

சான்றாக அந்தணரிலொருவர்செய்த சாக்ஷிப் பிரமாணம்.

## நம்மவர் நூற்றெட்டு.

பஞ்சாக்கரம் புகுந்த பார்ப்பாரின் வாயின்கண்
கஞ்சாக் குடியிருக்கக் கண்டின்றோம்—அஞ்சாத
போதையிலே மூழ்கிப் புலம்பிப் புலன்மயங்கிப்
பாதையிலே வீழ்வார் பரிந்து.

நாகையிலே போர்ப்பான் நகரிற் புகுந்துபாம்
போகையிலே கண்ட புதுமையேன்—நாகைப்
பறையர் சமைத்த பகவை காலித்து
மறையோர் புசித்தார் மகிழ்ந்து.

புகைவண்டி பேழியாம் போகையிலே கண்ட
மிகவிந்தை கேட்கில் வியப்பீர்—அகமகிழ
பல்லிற் சுருட்டிடுக்கி பார்ப்பிரிற்றுயி லென்பரோ
சொல்லிற் சிறந்தோர்செப்பி சொக்கி.

குடந்தையிலோர் பார்ப்பான் குடித்துக் குதித்துத்
தடந்தோளிற் அப்பாக்கித் தாங்கியே—படர்ந்தகம்
பக்கம் பாப்பிப் பரிவாரத் தோடேகும்
ஆபக்கிசடைச் சென்றான் பரிந்து.

ஏ மாணவ! இவ்வாறாய சில அனாசாரப் போலிப் பிராம ணர்களைச் சூத்திரரென்பது பிராடங்கபாகச் சொல்லாமலே அமையுமன்றோ? நிற்க; பின்னும், சாஸ்திர ஆராய்ச்சியும் சத்

*ஒத்து=நான்மறை ஓ.பக்க=பகுதி



தையுமுக்குமில்லாத சில சாதாரண பிராமணர்களுமே அங்க குடும்ப தேவமார்த்த கருப்பன், வீரன் முதலிய துர்த்தேவங்களுக்கு ஆடு பலியிட்டும், "அல்லாசாமியை வேண்டிக் கையிற் கயிற்றைக் கட்டியும் பிரார்த்தனைசெய்தலை யாம் கண்ணாரக்கண்டோமாதலின், அன்னோர் மேற்குடிப் பிறந்தாரேனுங் கீழ்க்குடியாரே யாகுவர். ஆகவே இன்னோர் சூத்திரரெனவிருமதியாற்கூறுமிற்றுரையைப் பெருமதியோர் பிழையெனத்தள்ளக்கடவர்.

சுலோகம்.

ராகோத்வேஷஸ்ச மோஹஸ்ச பாருஷ்யஞ்ச நிருஸம்ஸதா
ஸாட்யஞ்ச தீர்க்க ஸூத்ரத்வ மதிமாநமநாஜவம்
அநிருதஞ்சா திவாதஸ்ச பைஸுந்ய மதிலோபதா
விக்ருதிஸ்சாப்ய விஞ்ஞானஞ் ஜநநே ஸூத்ரமாவிஸேது.

(இ-ள்.) இச்சை, வெறுப்பு, வேட்கைப்பெருக்கம், வன்சொல், இரக்கமின்மை, தெளிவிலாச்செய்கை, சிராப்பிடிவாதம் நல்லொழுக்கமின்மை, பொய்பேசுதல், வீண்வாதஞ் செய்தல், கோட்சொலல், பெருமிலோபம், அடங்காமை முதலிய இக்குணங்களாவும் சூத்திரன் பிறந்தவாறே வந்தனவென்று அநுசாசனிக பருவத்துள் விதித்தவாறு காண்க. வேளாளர்க்கு யாண்டும் என்றும் இக்குணங்களிருந்ததாக நூல் வழக்கு முதலியனவின்றாம். என்றும் யாவருமிவரை "வாய்மை குன்றா வேளாண்விழுக்குடி" என்பது முதலியவாகப் புகழ்ந்தமை பன்னூலானுங் காணப்படுகின்றது. அதுகொண்டே ஸ்ரீ பரஞ்சோதிமாமுனிவர் தமது அருமைத்திருவிளையாடற்புராணத்து நகரப்படலத்துள்,—

வருவிருந்தெதிர்கொண்டேற்று நயனுரைவழங்குமோசை
பருகிருந்தடிசிலூட்டி முகமனங் கறையுமோசை
யுரைபெறுதமிழ்பாராட்டு மோசைகேட்டுவகையுள்ள
விருநிதியளிக்குமோசை யெழுகடலடைக்குமோசை

அருந்தினாருருந் தீச்செல்ல வருந்துகின்றருமாக்கே
விருந்தினிதருந்தாதிருக்க வின்னமுதட்டுப்பின்னும்
விருந்தினர்வரவுநோக்கி வித்தெலாம்வயலில் வீசி
வருந்தியின்றுறைக்குமோரேருழவர்போல் வாடிநிற்பார்.

வானமுந்திசையும்பொங்கும் புகழுடையுமளவாய்ப்பெறு
ஞானமும் பொறையுங்குன்று நன்றியுமுக்கப்பாடுந்
தானமுங்கொடையுமன்பும் வரிசையுந்தலைக்கானன்பு
மானமுந்தவஞ்செய்கின்ற மகவுபோல் வளர்க்கவல்லார்,

என்று திருவாய்மலர்ந்தருளிய திருப்பாக்களானும் விளக்கியபெருமையுங்காண்க. இன்னுஞ் ஸ்ரீஞானசம்பந்தசுவாமிகள் தமது திருமுறையுள் "வேளாளரென்பவர்கள் வள்ளன்மையான் மிக்கிருக்குந்தாளாளர்" என்று கூறினமையுமறிக. பிறக; இவ்வேளாளமரபினரில் பெரும்பாலாரான தேவாரச்செல்வராம் அப்பர்சுவாமிகள், பட்டினத்தார், தாயுமானவர், சிவப்பிரகாசசுவாமிகள், திருவிளையாடற் புராணஞ் செய்தருளிய பரஞ்சோதி மாமுனிவர், பெரியபுராணஞ் செய்தருளிய சேக்கிழார், சிவஞானபோதஞ் செய்தருளிய மெய்கண்டதேசிகர், திருவருட்பிரகாசவள்ளலாரென்னும் இராமலிங்கசுவாமிகள், இலக்கணக்கொத்து நூலுடையவராய திருநெல்வேலி சுவாமிநாத தேசிகர், கடைச்சங்கத்திருந்த பொய்யடிமையில்லாப்புலவர்களுள் ஆலத்தூர்க்கிழார், கோவூர்க்கிழார், செங்குன்றூர்க்கிழார், அரிசிற்கிழார் முதலானவர்களும், மற்றும் முருகக்கடவுள் வரப்பிரசாதியாங்குமரகுருபரசுவாமிகள், தருமபுரவாதீனக்கர்த்தரும் சிவபோகசாரஞ் செய்தருளியவருமான ஸ்ரீஞானசம்பந்தசுவாமிகள், திருவாவடுதுறை சிவஞானசுவாமிகள் முதலிய மடாதிபதிகளும், சைவ சமயமே சற்சமயமெனச்சார்ந்து ஸ்ரீசிவபெருமானையும் சிவனடியார்களையுந் தரிசித்து வணங்கி முத்திப்பேற்றிற்கு வித்தாய் விளங்க உத்தமர்களாம் நாயன்மார்களுள், இளையான்குடிமாறநாயனார், விறன்மிண்டநாயனார், மானக்கஞ்சாற நாயனார், அரிவாட்டாயநாயனார், ஏயர்கோன்கலிக்காமநாயனார், மூர்க்கநாயனார், சாக்கியநாயனார், சத்திநாயனார், வாயிலார் நாயனார், முனையடுவார் நாயனார், செருத்துணைநாயனார் கோட்புலி நாயனார், குண்டையூர்க்கிழார் முதலியவர்களும் இன்னுங் கல்வியறிவொழுக்கங்களிற்சிறந்த வித்வ சிகாமணிகளாம் பாரதம் பாடிய நல்லாப்பிள்ளை, திருநெல்வேலி மயிலேறும்பெருமாள் பிள்ளை, இலக்கண விளக்க மியற்றிய வைத்தியநாதநாவலர், சைவசித்தாந்த சாஸ்திரங்கள் பலவற்றையும் நன்காராய்ந்துணர்ந்தும், தம்முன்னிட்ட சிஷ்யரெண்ணிறந்தார்க்குப்போ



தனுசிரியருமாயத் தங்காலமுற்றும் பிரமசரியவாச்சிரமத்தொழுகி சைவசமய சாத்திரப் பயிர் சாலத் தழைத்தோங்கச் செய்தும், ஸ்ரீசிவபெருமானை மறவாத சிந்தையினருமான ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள், மகா வித்வான் ஸ்ரீ மீனாக்ஷிசுந்தரம்பிள்ளை, சபாபதிநாவலர், வித்வான் கதிரைவேற்பிள்ளை, தொழுவூர் வேலாயுதமுதலியார், திருமயிலை சண்முகம் பிள்ளை, சரவணப்பெருமாளையர், விசாகப்பெருமாளையர், சோழவந்தான் மகா வித்வான் ஸ்ரீ சண்முகம்பிள்ளை முதலானோருமாம். இன்னும் இவருள்ளிட்டாரெண்ணிறந்தோரும் இவ்வேளாண்மரபிலே பிறந்து, வித்தையாலும், புத்தியாலும் சக்தியாலும் அருட்சித்தியாலும் பெறுமுத்தியாலும் விசேடித்த சத்துவகுண வுத்தமசீலர்களாய், அன்றுமின்றுமென்றுநறுஞ் செய்தவமே தமக்கின்றியமையாத்துணையெனக்கொண்டும், வாழுநாளை வீணாளாக்காது மேனாளாகக்கழித்தும், உயிர்கட்கிரங்கியும், உண்மைபேசியும், சமயாசார நிஷ்டைகளாற்றம்மைச் சுத்திசெய்தும், சரியை கிரியாயோகஞானமார்க்கத்தைப் பற்றிச் சாதனசதுஷ்டயங்களைச் சாதித்தும், எக்காலத்தும் எவர்களாலும்புகழப்படும்பெற்றியுள்ள இவ்வேளாளச் செல்வர்களைப்பற்றி ஆழ்ந்தறியாது பாழ்த்த பேய்வாய் பிளக்குருத்திர ரென்று இன்னுமேங்கி தென்னல்ராம னென்னும் பித்துற்றினமைகேட்டு நம்முன் கூறுவதீர்; போதும் போதும் நிறுத்தும்.

மாணா:—அறிந்தனன், பிழை பொறுத்தாள்க; மேலே கூறிப்போந்த தசாங்கமுதலிய பெருமைவாய்ந்த வைசியவேளாளருக்குக் கேவலம் சேற்றில் ஏர்கொண்டு உழுதல் முதலிய கஷ்டத்துக்கேதுவாகிய தொழிலை விதித்தது எப்பெற்றிகொண்டோ? எளியேற்கருளுக.

## வேளாளர் நேரே ஏர்கொண்டுழுதல் செய்திலரென்பது.

ஆசி:—வேளாண்மாக்கள் பயிர்ச்செயல் விஷயமாகத்தாங்களே நேரில் ஏருழுதல் பெரும்பான்மை யென்குமில்லை. தங்கட்

குக் கீழ் வகுப்பினராகிய சில வறியர்களையும், மற்றும் பள்ளர் பறையர்களைக்கொண்டுமே அக்காலந்தொடுத்து இந்நாள்வரையில் பண்ணையாளாகவைத்துக்கொண்டு உழுது பயிர்செய்கின்றார்களே தவிர மற்றன்று. ஆனால் சில சாமானிய வறிய விவசாயிகள் தனக்காரர்கள் பண்ணையாளருக்குக் கூலிகொடுக்க வியலாது உழுதலை ஈண்டு காட்டுதல் பொருந்தா தென்க.

மாண :—இது நிற்க; வேளாளர் என்னும் பதத்தை, வேள் ஆள்பவர் எனப்பிரித்து, வேள்-மண்ணை ஆள்பவர் ஆனக்கூடியக்ஷத்திரியர் என ஏன் பொருள் படுத்தக்கூடாது தயவுகூர்ந்தருள்க.

## வேளாளநாம திரிபார்த்தம் பொருந்தாதென்பது.

ஆசி :—அங்ஙனம் பொருள்கோடல் அமையாது. என்னெனின், க்ஷத்திரியர் மன்னரென்வது பிரசித்தமாதலால் அது சிறப்பன்று. மண்ணிலுள்ள மனிதர்களை ஆளுந்தன்மையினரென்று பொருள்படுமே யொழிய வேளாண்மை யென்னும் உதவிசெய்தற்காரணமாகக் கிடைத்த வேளாளநாமத்துக்கு மேற்கண்டவாறு செய்த உரை தவறுமென்க. இன்னும் வேளாளர், அந்தணர்க்குத் தானமும் அரசர்க்கு வரியும், சூத்திரர்கட்குக் கூலியும், சங்கரர்களுக்குப்பிச்சையுங்கொடாவிடத்து உலகு நிலைபெறாதாகலானும் கொடைக்கே உரிமைகடன்பற்றி வந்தவராகலானும் இவர்களை விட்டு க்ஷத்திரியரெனக்கொள்ளல் சிறிதும் பொருந்தாதென்க.

மாண :—ஆயிந்தனன்; வேளாளருக்கு வைசியர் என்று ஸ்மிருதி சம்மதம் ஏற்பட்டதற்குப் பொருளுரைக்குமாறு பிரார்த்திக்கின்றேன்.

## வைசியநாம சப்தார்த்தம்.

ஆசி :—வைசியர் என்னுஞ் சொல் ஸ்மிருதிக்கண்டோன்றிய வடமொழிப்பெயர். இது சாதாரணமாக "வைஸ்" என்



னுந் தாதுப்பொருளை ஆதுத்தாரராகவின் . வர்த்தகர், பயிரிடுவோ எனப் பொருள் படுகின்றமையால் வேளாளருக்கு வடமொழிப் பெயராய் வைஸ்யரென வந்ததாமென்க.

மாண :—அறிந்தனன். இதுநிற்க, ஸ்மிருதி சம்பந்தமாயும் மற்றும் இதிகாச சாக்ஷியாகவும் நான்கேஜாதிகளெனச் சித்து வருகிறீர்கள்; உலகத்திலோ இப்போது காணப்படுகின்ற ஜாதிப்பிரிவினை அநந்தமாயிருக்கின்றன. இவ்வாறு பலபடவிருந்ததற்குப்போதுமான காரணமும், ஜாதி நான்கே யென்பதற்குப் போதிய உதாரணமும் தந்தாயின் தயவுகூர்ந்தருளுக.

ஆசி :—ஸ்மிருதி சம்மதத்தால் ஆதியில் படைப்புப் பொருளெல்லாம் நால்வகைத்தென்றே நன்கு புலப்படுகின்றது. எவ்வாறெனின் ;

### தேவர்களிற் சதுர்வருணம்

| | |
|---|---|
| பரமசிவன் | பிராமண சாதி |
| விஷ்ணு | க்ஷத்திரிய சாதி |
| பிரம்மா | வைசிய சாதி |
| இந்திரன் | சூத்திர சாதி |

ஸூத்திரம்.

பிராமணோ பகவான்ருத்ரோ க்ஷத்திரியோ பரமோஹரி:
வைஸ்யப் பிதாமகஸ்சைவ இந்திரஸ்ஸூத்ர அஜாயதே.

### நவக்கிரகங்களிற் சதுர்வருணம்.

| | |
|---|---|
| சுக்கிரன், குரு | பிராமணசாதி |
| சூரியன், செவ்வாய் | க்ஷத்திரியசாதி |
| புதன், சந்திரன் | வைசியசாதி |
| சனி, | சூத்திரசாதி |

சிநேந்திரமாலை (பாடபேதம்)

ஆதித்தன் செவ்வா யரசர்க்கோ ளாகுமால்
வாதித்த புந்தி மதிவணிகன்—ஓதும்
மறைக்குலக்கோள் மன்னவனுஞ் சுக்கிரனு மற்றைக்
குறைக்குலக்கோள் காரியெனக் கூறு.

## இராசிகளிற் சதுர்வருணம்

| | |
|---|---|
| கர்க்கடகம், விருச்சிகம், மீனம் | பிராமணசாதி |
| சிங்கம், தனுசு, மேஷம் | க்ஷத்திரிய சாதி |
| துலாம், கும்பம், மிதுனம் | வைசிய சாதி |
| கன்னி, இடபம், மகரம் | சூத்திரசாதி |

(பாடபேதம்)

வெந்தனரி யாழிசை வேதியர்தேள் கண்டமீன்
வாய்ந்ததுலை யாழ்கலசம் வணிகர்—மாக்கரீர்
கன்னிசுறு காளைக் கடைஞரிவை யென்பரே
புன்னுகலை வல்லபெரி யோர்

## மிருகங்களிற் சதுர்வருணம்

| | |
|---|---|
| ஆனை, குதிரை | பிராமணசாதி |
| சிங்கம் | க்ஷத்திரிய சாதி |
| பசு | வைசிய சாதி |
| எருமை | சூத்திர சாதி |

மூலம் இதுவுமது

பரிகரியும் வேதியரும் பார்ம னரியாம்
பெரிய பசுவணிகர் பேதாய்—உரியதொரு
மேதியது சூத்திரனு மேதினியி லெப்போதும்
ஓதியுணர்ந் தோருரைத்தா ருற்று.

## பக்ஷிகளிற் சதுர்வருணம்

| | |
|---|---|
| அன்னம், காகம் | பிராமணசாதி. |
| சரபம், இராஜாளி | க்ஷத்திரியசாதி. |
| மயில் | வைசியசாதி. |
| ஆந்தை | சூத்திரசாதி. |

இதற்கு மூலம்

அன்னங்கொடிமறையோன் அஞ்சரபம்ராஜாளி
மன்னர் மயில் வணிகன் மாநிலத்தில்—சொன்ன
சூத்திரன்றானந்தை சோர்வில் பக்ஷிசாதிவகை
மாத்திரமாக்கொள்வீர் மதித்து.



## விருக்ஷங்களிற் சதுர்வருணம்.

| | |
|---|---|
| மா, வில்வம் | பிராமணசாதி. |
| அரசு, பூவரசு | க்ஷத்திரியசாதி. |
| பனை | வைசியசாதி. |
| எட்டி | சூத்திரசாதி |

இதற்கு மூலம்.

மாவில்வ மாமறையோன் மன்பூவரசரசாம்
பூவணிகன் றன்பனையாம் போற்றுமிட—நாவிசைக்கு
எட்டியது சூத்திரனு மென்றுமதி வல்லோர்முன்
ஒட்டியது தானுரைத்தா ரோர்ந்து.

## இரத்தினங்களிற் சதுர்வருணம்.

| | |
|---|---|
| வயிரம், முத்து | பிராமணசாதி |
| மாணிக்கம் பவளம் | க்ஷத்திரியசாதி. |
| புஷ்பராகம், வைடூரியம், கோமேதகம் | வைசியசாதி |
| நீலம், மரகதம் | சூத்திரசாதி |

திருவிளையாடல் மாணிக்கம்விற்ற படலம்.

முன்னவரென்பகற்றோர் வச்சிரமுந்நீர் முத்த
மன்னவரென்பதுப்பு மாணிக்கம் வணிகரென்ப
மின்னவிர் புருடராகம் வயிரியம் வெயிற்கோமேதம்
பின்னவரென்ப நீலமரகதம் பெற்றசாதி.

என்றிவ்வாறாக பெரும்பாலும் நான்குவகையானே விளங்கப்படலால் மனுஷ்யஜாதியும் நான்கேயல்லது வேறில்லை. ஆனால் இக்காலத்தில் மேலேகூறிய நான்குஜாதியரும் 16-ஜாதிகளாகியும், இன்னும் சங்கரஜாதிகள் பற்பலவாக நவீன கற்பனாபோலிக் குருமூர்த்திகளால் தோன்றியும், மற்றும் அன்னியதேசத்தினின்று மிலேச்சஜாதியரும் இத்தேசத்தில் குடியேறி நாகரீகத்

தால் யாதி வேறுசாதியராயெயுங் காணப்படுகின்றார்கள். ஆயி னும் இன்னோர் வேதாதிகாரத்தால், பேசப்படாதா ராகலின் சண்டெடுத்துப்பேசவ நறுவியமெனத் தள்ளப்பட்டது. இரிக் கிற் பெருகுமெனவறிக.

மாண—அறிந்தனன்; இரைமிக்க; சிவபுராணங்களினும் வே ளாளர்சூத்திரரென்றே பேசிவருகின்றதே; இதன் விவர மென்ன அருள்செய்க.

# வேளாளரைச் சூத்திரரென்ற புராண விவரணம்.

ஆசி—சில நூற்றாண்டுகளுக்கு முன்னே இத்தேசத்தில் ஆகமவிரோதிகளாகிய மாயாவாதிகள் பிரவேசித்து ஆகமங்களை மறைத்துச்சில குறும்பரசர்களுக்குக் குலச்சிறப்பு முதலிய விசே டங்களைச்சிறப்பித்துச் சுவாதீனஞ் செய்துகொண்டு பொறுமையால் ஆகமவாதிகளாகிய ஆதிசைவ வேதியர்களைப் பூசாரியெனவும், அவர்கட்குச் சார்பாயிருந்த வேளாளர்களைச் சூத்திரரெனவும் வழங்குவிக்க, அதன் வயப்பட்டு அக்காலத்துள்ள அறிஞர்கள் குறும்பரசர் அதிகாரத்திற்கஞ்சி வாளாவிருக்க, பிற்காலத்துள் ளாரும் உண்மையுணராது மயங்கி,

> நூலுரை போத காசிரியர் மூவரும்
> முக்குணவசத்தான் முறைமறந்தறைவரே.
> இம்முறையெல்லா மெவர்பகுத்தறியினும்
> அவத்தைவயத்தால் அலைகுவர் இடமே.
> அதிமதிநுட்பமோடதி நால் கற்பினும்
> விதிபலவசத்தால் விதிவிலக் கயர்ப்பர்.

என்றிலக்கணக்கொத்துட் கூறியபடி அவத்தைக்குள்ளாய் அப்புராணங்களுட் கூறினர். இஃதன்றியும், அம்மாயாவாதிகள் ஆதிசைவ வேதியரையும் வேளாளரையும் சூத்திரர்களென்ப



தோடு விட்டபாடின்றி ஞானிகள் சிலரால் செய்யப்பட்டுள்ள நூல்களிலும் அவ்வண்ணமே தங்கள் கருத்தைப்போல் மனம் போனபடி பலவிஷயங்களைத் திருத்தமிட்டு மிருக்கின்றார்கள். இதுமட்டோ! எவ்வகைப்பட்ட வேள்விகளினும் அக்ரதாம்பூலச் சிறப்புள்ளவர்களும், சகலபுராண நாயகர்களுமாகிய பிரதம சாகைப் பிரமணர்களைப் பொருண்மையாகிய குலமுதல் மத்யாஸ சண்டாளத்துவமாய் பெற்றவரெனப் பொய்க்கதை கட்டிப் புலம்பாநின்றனர்.

இங்ஙனம் இம்மாயாவாதிகள் ஒருவர்மட்டோ! இவால் லாப்பலசமயவாதிகளும் பாரதம், இராமாயணம், பதினெண்புரா ணங்கள், ஸ்மிருதிகள், அகநூல்கள், உபநிடதங்கள், சுருதி மொழிகள் முதலிய எல்லாவற்றையும் வேண்டியவாறு மிகுத் தும், குறைத்தும், மாறுபடுத்தியும் விட்டார்கள். பண்டைக் காலத்துதான் இவ்வாறு செய்தார்களேயென்றால், இக்காலத் தும் மேற்கண்டவாறே மதத்து வேஷகாரணமும் அறியாமையும் பொறுமையுங் கொண்டு பிரசங்கம், பத்திரிகை, புத்தக முதலி யனவாயிலாக மாறுபடத் திருத்தி வருகின்றார்கள். இம் மாறு பாடு எல்லாப்பாஷைகளினுமுள்ளன. என் செய்வாம்! வினைத் திறமும் காலவித்தியாசமும் சேர்ந்தவாறென்க. ஆகலான் நீவிர் நன்கு பரிசீலனையாலும் தொன்னூற் பயிர்ச்சியாலும் நாளடை வில் தெளிவீராக.

மாண:—ஆம் அவ்வாறே அறிவேன். இம் மாயாவாதியர் இங்ஙனம் மாறுபடச்செய்த தெற்றுக்கோ வழிவிக்கவும்.

# மாயாவாதியரின் கொள்கை.

ஆசி:—இம் மாயாவாதியர்க்கு முக்கியமாக பாவம் என்ப தொன்றில்லையென்னும் தங்கள் சித்தாந்தத்தணிபேயன்றி வே றல்ல. என்னெனில், அவர்களது மாயாவாத நியாயப்படி சிவன் என்பதொன்றில்லை; எல்லாம் பிரமமே யென்றும், எல்லா நற் செயல் தீச்செயல்களும் பிரமமே காரிப்பப்பட்டு புரிதலால் பாவ

புண்ணியங்களின் பயன் இவர்களுக்கில்லையென்று கொடுத்தனரி பேயாம். விரிக்கிற் பெருகும்.

மாண:—கூறியவற்றைக் கேட்டேன். தேவரீர் கூறியவாறு உண்மையெனத் தெரிந்தேன். அவ்வாறு தோன்றினும் இடையிடையே சிலசந்தேகங்களும் உடனிகழ்ச்சியா யென் மனதில் ஏற்படுகின்றன. அதாவது வேளாண்மாக்கள் வைசியரென்பதற்கு எவ்வளவோ பிரமாணங்களை அடுக்கடுக்காயெடுத்துக் காட்டுகிறீர்கள். அவையனைத்தும் சரியே; ஆயினும் நம் வேளாண் மரபினர் வைசியரேயானால் பூணுநூல், வேதபாராயண முதலியன ஸ்மிருதிகள் இவர்கட்குக் கூறியிருக்கும் இன்னோர் அதனைச் சிறிதும் அநுசரியாது விட்டதைக்கொண்டு ஏன் இவர்களைச் சூத்திரரென்று கூறவொண்ணாது? தயவுசெய்தருள்க.

## வேளாளர், பூணுநூல் தரித்தல் உரித்தாமெனல்.

ஆசி—சிட, நன்றாகூறினை! நம் வேளாண்மாக்களுக்குக் காலவேறுபாட்டாலும், தொழில் வேறுபாட்டாலும், சாஸ்திர பயிர்ச்சிக்குறைவாலும் வருணாச்சிரமவொழுக்கத்தினை நன்கெடுத்தோதும் மநுஸ்மிருதி, பராசரஸ்மிருதி, யாஞ்ஞவல்கியஸ்மிருதி முதலிய ஸ்மிருதிகளில் விகளிவாய்க் கூறப்பட்டுள்ளதை பகுத்தறியும் சார்பில்லாமை, ஒருமைப்பாடில்லாமை, தெளிவாய் விசாரியாமை, அக்கிரபழக்கமுடைமை முதலிய பல காரணங்களால் கல்வி ஊக்கங்குறைந்து இந்த விசாரிப்பினால் பயன் யாதெனச் சிரத்தையின்றி நாத்திகம் பேசக்கற்று சோம்பலதிகரித்து வறுமைக்கிடனாய் வரவர அம்முன்னோரொழுக்கங்குறைந்துவருகின்றது. ஆயினும் தற்காலத்தில் பெரும்பாலார் சபாசபகருமகாலத்தும் தவறாது பூணுநூல் தரித்தே வருகின்றார்கள்.

மாண—இது நிற்க; வேள்வி, வேதபாராயணமென்னுமிவையும் ஏன் செய்யாதொழிந்தனர்?



## வேளாளர் வேதாதிகாரிகளெனல்.

ஆசி—கூறுகப். வைசியராம் நம்வேளாண்குடிமக்கள் மநுதருமர் வருத்தகாருவிலாசம், உபநயன முதலிய சோடசகருமங்கள், சந்தியாவந்தனை, விவாகவிதிகள், திருவாணைநிலைகள், ஆசாரவிதிகள், சௌசாசமனம், ஆடைபுனைதல் முதலிய பிறவும் பராசரஸ்மிருதிகள் விதித்தவாறு பெரும்பாலார் அநுஷ்டித்தே வருகின்றார்கள். சிறுபான்மையோர் தங்கட்குள் இலௌகிகவிருத்தியாலும், பிரமசாரியாலும், வறுமையாலும், சில கருமங்களை நெகிழ்விட்டனர். இருக்கு வேதம், ஆகமம், உபநிடதம், புராணம் என்னுமிவ்வைந்தையும்பற்றி விசாரிக்கப்புகின் சுவ்வரவாக்கியமென்றே அதனதன் தலையிலே குறிப்பித்திருக்கின்றன. ஆகவே ஒருபடித்தான ஆன்மாக்களைப் பிழைப்பிக்க வேண்டிக் கருணையினாலே திருவுளங்கொண்ட கடவுள், அவ்வான்மாக்களுக்குப் பக்குவநோக்கிப் பாசஞானம், பசுஞானம், பதிஞானம், அநுபவஞானம் என்னும் நான்குவித உணர்ச்சிகளையும் விளக்குவிக்கும்பொருட்டு அவ்வவற்றை விதித்துள்ளமையால் பக்குவான்மாக்கள் தங்கள் தங்கள் மந்ததரதீவிரதர பக்குவத்தினராக ஒவ்வொருவர் அவ்வொன்றை யப்பியசிப்பதைப் போலவே வேதத்தையும் இவ்விதப்பக்குவிகள் சிற்சிலர் ஓதியுணர்ந்திருக்கின்றார்கள் என்க.

மாண—இப்போது தேவரீர் கூறியவாற்றான் வேளாண்மாக்களில் வேதத்தை ஓதியுணர்ந்தார் இன்னார் என்பதை அறிவிக்கப் பிரார்த்திக்கின்றேன்.

## வேளாண்மரபினரில் வேதபாராயணஞ் செய்தார் இன்னாரெனல்.

ஆசி—"ஆதலர்க்குச்செப்பேர னளிக்குன்னை யாகமங்கள் வேதபுராணங்கள் விரிக்குன்னை" என்ற மெய்ம்மொழிப்பிரகா

ரம் பூர்வாசிரியராகப் போதஞ் செய்தருளிய * மெய்கண்டதேசிகர் வேளாளரே. அவர் தமது நூலில்

அக்கரங்களின்றாம் அகரவுயிரின்றேல்
இக்கிரமத்தென்னு மிருக்கு.

எனப் பிரமாணித்தவிடத்து, அவர் வேதமுணர்ந்தவரென்றே தெள்ளிதிற் றுணியப்படும். இது நிற்க: சிலகாலத்துக்கு முன்னே திருவாவடுதுறை ஆதீனத்தில் எழுந்தருளியிருந்த ஸ்ரீ சிவஞானசுவாமிகள் வேதாந்தபாஷியம் வாசிக்க அபேக்ஷித்தகாலத்தில், ஓர் ஸ்மார்த்தப்பிராமணர் சூத்திரரென்று சொல்லிவைப்பதற்குத் தடுத்துப் பின் கடவுள் சந்நிதியிலிட்ட திருவுளச்சீட்டு விதித்ததால் சொல்லப்படுமென்று கூறி அவ்வாறு அப்பாஷியத்தைக்கூற உணர்ந்தனர்.

இன்னும் சுத்தசைவ வேளாளர்கள் வேதமாதாவாகிய பிரமகாயத்திரி, சிவகாயத்திரியை ஜெபித்தும் வருகின்றார்கள். சிலர் இரகசியமாக வேதத்தை பாடியத்தோடும் ஆராய்ந்தறிந்து வருகின்றார்கள். ஆயின், வேளாளரனைவரும் ஓதவில்லையெனில், அது அடாது; பிராமணர்களில் சிலசார்பார்மட்டும் எவ்வாறு ஓதிவருகின்றார்களோ அதுபோன்று சைவவேளாளர்களிலும் பக்குவப்பட்ட சிலரே ஆராய்ந்து வருகின்றார்கள்.

வேதமென்பது ஒன்றேயாயும், பொருட் பாகுபாட்டால் நான்மறை யாகுதல்போலவே மொழிப்பாகுபாட்டாலும் வடமொழிமறை, தென்மொழிமறை யென்றும் இருவகைப்பட்டுள்ளன. இவ்வாழ்நாட் பல்பிணிச் சிற்றறிவினையுடைய மாந்தர்க்குப் பயன்படுமாறே வியாசர் இருக்கு, யஜுர், சாமம், அதர்வணம் என நால்வகைப்படுத்தினர்போன்று திருவருட்செல்வராய நால்வர்களாலும் ஆழ்வார்களாலும் அருளிச்செய்யப்பட்டதுமான திராவிடவேதத்தை சைவ வேளாளர்கள் பக்திசிரத்தையோடும் பாராயணஞ் செய்துவருகின்றார்கள். இதுநிற்க; தெய்வப் புலமைத் திருவள்ளுவனாரால் செய்தருளப்பட்ட திருக்குறளும் தமிழ்வேதமென்றே சாற்றுவாம். எங்ஙனமெனில், திருவள்ளுவரது பூர்வஜன்மம் பிரமதேவர். அப்பிரமதேவர் வாயிலாக

* மெய்கண்ட தேசிகரை மறைஞானதேசிகரென்று கூறுவாரும் உளர்.



வே நான்மறை பிறந்தனவென்பது யாவர்க்கும் விளங்கும். அங்ஙனமாகக் கடவுளாது பிரேரேபணையானே வடக்கின்கண்ணேயுள்ள வடமொழிப் பயிற்சியோர்க்குப் பயன்றருவனவாயிருக்கின்றதேயன்றித் தெற்கின்கண்ணேயுள்ள திராவிடபாஷையோர்க்குப் பயன்படுமா றின்றேயென அந் நான்முகனை இத் தமிழ்நாட்டின்கண் திருவள்ளுவராக அவதரிக்கச்செய்து அவர்வாயிலாக அந் நான்மறைப் பொருளினையே முப்பாலாகப் பிரித்துக் குறளென்னுந் தமிழ்மறையைத் திருவாய்மலர்ந்தருள விரும்பப் பட்டதென்றுத் தெற்றெனப் புலனாகின்றது. இதற்குப் பிரமாணம் வருமாறு காண்க.

## நாமகள் அசரீரி வெண்பா

நாடா முதனான் மறைநான் முகனாவிற்
பாடா விடைப்பா ரதம்பகர்ந்தேன்—கூடாரை
யெள்ளிய வென்றி யிலங்கிலைவேன் மாறபின்
வள்ளுவன் வாயதென் வாக்கு.

(இ-ள்) பரிமேலழகர் உரை: கூடாரை. எள்ளியவென்றி இலங்கு இலைவேன் மாற—பகைவரைப் புறங்கொடுக்கச்செய்து இகழ்ந்த வெற்றியை யுண்டாக்கி விளங்காநின்ற இலைபோலும் வேற்படையையுடைய பாண்டியராசனே, நாடா—உலகத்தார் விரிவிலக்குகளை அறிந்து உய்யும்வழியை நாடி, முதல் நான்முகன் நாவில் நான்மறை பாடா—படைப்புக்காலத்திலே பிரமனது நாவிலிருந்து இருக்கு முதலாகிய நான்குவேதங்களையும் பாடி, இடைப் பாரதம்பகர்ந்தேன்—நடுவானகாலத்திலே பாரதமாகிய வேதத்தைக்கூறினேன்; பின் என் வாக்கு வள்ளுவன்வாயது, அதற்குப்பிற்பட்ட இக்காலத்திலே என்வாக்குத்திருக்குறளாகிய வேதத்தைச்சொல்லி வள்ளுவன்வாயின் கண்ணதாயிற்று.

தன் கணவனாகிய நான் முகனாவிலிருந்தென்றும், அவனவதாரமாகலின், வள்ளுவன் வாயதென் வாக்கென்றும் கூறினாள். பாரதம் வியாசரைக்கொண்டு சொல்லப்பட்டது. இதனால் நான்மறை பூர்வவேதமும், பாரதம் மத்தியவேதமும், திருக்

குறள் உத்தரவேதமும் என்றதாயிற்று. வேதம் மூவகைத்தமிழ்தனை பதாஉம், இவற்றை தேர்ந்துமறையாம் இஃது வாக்கியப்பிரமாணத்திற் சிறப்புடைத்தெனப் படூஉம் சொல்லியபடி.

மா—அறிந்தனன்; தேவரீர் மேலே கூறியவாற்றான் திருக்குறளும்பாரதமும் நான்மறைப்பொருளாயி விளக்கினவேயன்றி திருவருட்செல்வராம் நால்வர்களால் அருளிச் செய்யப்பட்ட தேவார திருவாசகாதிகள் அம்மறைப்பொருளாய்க் கூறப்படவில்லையே! அதற்கேனும் ஆன்றோர் வாக்குளதாயின் தயை செய்க.

## தேவாரதிருவாசகாதிகள், திருக்குறள் நான்மறைச் சாரப்பொருளெனல்.

ஆசி- தேவர் குறளுந் திருநான் மறைமுடிவு
மூவர் தமிழு முனிமொழியுங்—கோவை
திருவா சகமுந் திருமூலர் சொல்லும்
ஒருவா சகமென் றுணர். என்று ஒளவையும்,

செய்யாமொழிக்குந் திருவள்ளுவர் மொழிந்த பொய்யாமொழிக்கும் வேறொன்றே என்று சங்கப்புலவராகிய வெள்ளிவீதியார் கூறியவாற்றானும் பிறவற்றானும் [illegible]. இன்னும், தேவாரதிருவாசகாதிகட்கு மறைத் திருநாமம்மேற் கூறிப்போந்த செய்யுட் பிரமாணமே போதிய சான்றாம் இஃதன்றியும், ஆளுடையபிள்ளையார் திருப்பிரமபுரம் பண்-நட்டபாடை "திருநெறிய தமிழ்வல்லினை தீர்தலெளிதாமே" யெனவும் திருச்செங்காட்டங்குடி பண் பழந்தக்கராகம், கறையிலங்கு மலர்க்குவளைக்கண்காட்ட என்றதிருக்கடைக்காப்பிலே, செங்காட்டங்குடிசேர்த்து மறையிலங்குதமிழ்வல்லார் வானுலகத்திருப்பாரே, எனவும் கூறியவாற்றானும் செவ்விதின் விளங்குமென்க. இங்ஙனம், இத்தேவாரம் திருவாசகம் தமிழ்மறையே யென்பதற்குப் பிறசான்று வேண்டா. முன்னர் வேதாரணியமாகிய திருமறைக்காட்டில் வடமொழிவேதம் பூசித்து அடைத்திருந்த கதவினைப் பிள்ளையாரும் அரசுகளும் எழுந்தருளியபோது தமிழ்மறைப்பதிகங்களே திறந்தும் மீண்டுமடைத்தது. ஆகவே எத்திறவுகோல் எதனைப் பூட்டிற்றோ அத்திறவுகோலன்றி யப்பூட்டு விடாதென்பது உலகறிந்த வழக்கு ஆதலானும், அழகிய திருச்சிற்றம்பலமுடையார் தாம் அருமைத்திருக்கரத்தா லெழுதப்பட்டுளதாலும் என்றுணர்க.



மாண—தெரிந்தனன்; வடமொழி நான்மறையைச் சில்லோரும் தென்மொழிவேதமாகிய பாரதம், திருக்குறள், நால்வர் தேவாரதிருவாசகாதிகள், ஆழ்வாராதியர் அருளிச்செய்த நாலாயிரப் பிரபந்தம் என்றுமிவைகளைப் பல்லோரும் ஓதிவருகிறார்களென்றும், மொழி வேறுபாடேயன்றிப் பொருள் வேறுபாடின்றென்றும், இவ்விரண்டும் தம்முள் சமத்துவமுடையனவென்றும் தக்க பிரமாணங்களோடு கூறினீர்கள்; மிக்கவுவக்கின்றேன். இதனிற்கு; இங்ஙனம் வேதாதிகாரிகளாகிய வேளாளர்மரபினர் பூணூல் தரித்துக்கொள்ளவேண்டிய விதியுமிருக்கவேண்டுமே! உளவாயின் அதற்குரிய சுருதிப்பிரமாணங்களை எடுத்தோதுக.

## வேளாளர் பூணுநூற்றரித்தல் ஸ்மிருதி சம்மதி.

ஆசி—ஆம், மேற்கூறிய சதுர்வருணத்தாருள் முதல் மூன்றுவருணத்தார்க்கு முறையே பிராமணர் பருத்தி நூல் முப்புரியும், க்ஷத்திரியர் சணல்நூல் முப்புரியும், வைசியராம் வேளாளர் கம்பளிக்கயிற்றாற்செய்த முப்புரியுந் தரித்தல்வேண்டுமெனக் கூறப்பட்டுள்ளது.

பராசரம் 2-ம் அத்-39-ம் பக்கம் இருடிசிங்கமுனிவர்

அபிவாவலனாயக்ஞோபவீததாரணம்
குர்யாத்தபாவேத்திரிவிரதாலஹ்த்ரேண.

ஆடையாளையினும் பூணூலைத்தரிக்கலாம். ஆடை கிடையாவிட்டது மூன்றிழை நூலாலாயினுந் தரிக்கலாமென்றேற்படுகின்றது. இவ்வணமே வேளாண்மையினருள் பெரும்பாலார் ஆடையையே பூணூலாகக்கொண்டு உத்தரீயமாகத் தரித்துவரும் வழக்கமுள்ளது. அன்றி வைதிக கருமகாலத்தும் கம்பளம், அல்லது சாலுவை, இவ்விரண்டிலொன்று காப்படி. இவைகளில் ஏதேனுமொன்றை அவசியம் உத்தரீயமாகத் தரித்தேவருகின்றனர்.

மநு (பராசரம் 2-ம் அத். ...வது பக்கம்.)

கார்ப்பாஸமுபவீதம்ஸ்யாத் விப்ரஸ்யோர்த்வவிருதந்த்ரிவ்ருது
ஸணஸூத்ரமயம்ராக்ஞோ வைஸ்யஸ்யாவிகஸூத்ரகம்

பருத்திநூல் வேதியருக்கும், பட்டுநூல் அரசருக்கும், ஆட்டுமயிர்நூல் வைசியருக்கும் ஆகுமென மநுஸ்மிருதி கூறுகின்றார்

கார்ப்பாஸமுபவீதம்ஸ்யாத் பிராம்மணஸ்யைவ வைஸ்யம்
ராஜக்யஸ்யாவிகம் வைஸ்யஸ்ய

பருத்தி, பட்டு, பசுவால்மயிர், சணல், மரநார், வைக்கோல் முதலியவற்றுள் கிடைத்ததனால் பூணூல் செய்து இருபிறப்பாளர் எப்போதுந் தரிக்கலாம் என்று தேவலர் கூறினர்.

கார்ப்பாஸக்ஷௌமகோவால ஸணவல்கத்ருணோத்பவம்
ஸதாஸம்பவதாகார்யமுபவீதம் த்விஜாதிபி:

என்றஸ்மிருதி வசனங்களால் நன்கறிகுதி

மா—சரியே, ஆயின்மேலே கூறியவண்ணம் இக்காலத்துள் சனங்கள், ஆட்டின் ரோமத்தாலாயபோல்வன எவருந் தரியாதிருக்குங்காரணம்யாதோ?

ஆசி—வேதியர் முதலாயினோர் விதிப்படி மான்றோல் முதலிய போர்வைகளும், தண்டங்களும் பிறவொழுக்கமும் காலவியற்கையில்லாமை முதலிய பலகாரணங்களால் நழுவியது போல வைசியருந்தவறினரென்க.

மாண—தேசிகோத்தம! மநு, தேவலர், காத்தியாயனர், கௌதமர், பிருகு முதலியோர்கள் மாத்திரம் பருத்திநூல்கொண்டே பூணூல் தரித்தல் வேண்டுமென்றதென்னோ? அருளுக.



ஆசி—சீட, பெரும்பாலும் முனிவர்குழாங்கள் பூணியவாசிகளாயிருந்ததால் அவர்கள்பால் வேதமோதும் முறைமைப் பிரமசாரியர் முதலியோர்க்கும் மற்றும் பிறவாச்சிரமத்தார்க்குமே ஆடையின்றிநூல் முதலியவைகளுக்கு வைதிககருமகாலம் விளங்குமாறு பருத்தி நூலும், போர்வைக்குத் தோலும், உடைக்கு மரவுரி முதலியனவும் விதித்தனரென்க. இவ்வாறாக வைசியர் தரித்தற்குக் கம்பளம் அல்லது சாலுவை இவ்விரண்டிலொன்றை நமது வேளாளரிலர்கள் நித்தம் வைதிககருமகாலங்களிலெல்லாம் தரித்தேவருகின்றார்கள் என்பது திண்ணம்.

## வேளாளர் பூணூல் சதா தரியாமைக்கு ஏது இவையாமெனல்.

இன்னும், வேளாளர் தங்களிப்படி இவ்வுபவீததாரணத்தை விசாரித்ததற்கு முன்பு ஒருக்காலும் செய்யாதொழிவதில்லை. பிராமணரைப்போன்று தாங்கள் எக்ஞோபவீதத்தை விடாமல் தரிப்பதில்லையே யென்ற பக்ஷத்தில் இவ் வேளாண் குடிமக்கள் பிராமணரைப்போலல்லாமல் வியவசாய முதலிய தமது லௌகிக கருமங்களால் கீழ் வகுப்பினரோடு பழகுதல் அடிக்கடி நேர்வதாலும், அப்பழக்கத்தால் தாந்தரிக்கும் எக்ஞோபவீதத்திற்கு அபரிசுத்தம் சம்பவிப்பதாய் பாவித்து எக்காலத்திலேனும் அல்லது பூர்வத்திலோ சதா தரிப்பதைவிட்டு அதைத் தரிக்குங் கலியாணத்தின் வழுவாது விவாகம், சிரத்தம், கருப்பணம், அக்கினிப்பஸ்டி, ஆப்திகமுதலிய விரதாநுஷ்டான வைதிக கருமகாலங்களில் உபயோகப்படுத்துகிறார்கள்; சாதாரணமாக லௌகிகாநுகூலத்தினிமித்தம் ஓர் சுதந்தரப்பொருளை நிதிபோல் விடுவதால் எப்போதும் உபவீததாரணமில்லையென்பது சிறிதும் பொருந்தாவாம். ஆகவே வைசியராம் முறைமை வே

ளாண்மாக்களுக்கும் பூணூல் அதிகாரம் விசேஷமான அம்சமென்றேற்படுக.

மாணா—ஐயா ஆசிரியமணியே! மேற்கூறிய உபவீத சம்ஸ்காரம் இன்னதென்று தெரிந்துணர்ந்தேன். இதனிற்க இப்பொழுது இந்நால்வகை வருணம்வந்தது தொழிற்பற்றியோ, அல்லது பிறப்புபற்றியோ தெரிந்துகொள்ள விசேஷம் எனக்குண்டாகியிருக்கின்றதாகையால் தேவரீர் அதைப்பற்றி யான் விளங்குமாறு யுரைக்குமாறு பிரார்த்திக்கின்றனன்.

ஆசி—செங்கோன் தரைய செழுமுனி மீட்டுமச்
செந்நெல் வாரி யுணர்தரா—வக்கெல்
வயனிறையக் காக்கும் வளவய லூர
மகனறிவு தந்தையறிவு.

என்ற காரிகையாலும், "மறப்பினுமோத்துக்கொளலாகும் பார்ப்பான், பிறப்பொழுக்கங் குன்றக்கெடும்" என்ற குறளாலும் பிறவுநோக்கிப் பிறப்புபற்றியே வந்ததெனத் தெளிக.

மா—அங்ஙனமாயின் விஸ்வாமித்திரரும், கண்ணுவரும் அரசவருணத்திற் பிறந்து பிறகு கருமத்தால் வேதியராயினரென்று பாரதம், விஷ்ணுபுராணம் முதலியவைகளிற் கூறியிருக்கின்றதே! இதற்கு சமாதானமென்னை விளம்புக.

ஆசி—ஜன்மநா ஜாயதே சூத்ர: கர்மணா ஜாயதே த்விஜ: என்பது பிறப்பாற் சூத்திரனும், கர்மத்தால் பிராமணனுமாவரென்று ஏற்பட்டிருப்பினும், ஈண்டெடுத்தோதிய இருபெருமுனிவர்க்கும், பிறப்பால் அரசர், சூத்திரர் எனவும் அந்நாற் பெருங்குலமாகிய வருணத்திலே முன்புகூறிப் பின் தவத்தால் வேறு வருணம் வந்ததென்றே கூறியவாறன்றி, வருணமென்பதில்லாமலே பிறந்த பின்னர் செய்தகருமத்தால் வருணம் வந்ததென்று கூறுதல் அமையாதென்பாம். பிறவிய கருமசேடத்தால் வந்தவாறென்பதே வேதாகமங்கள் விதித்தவாறும்.

இன்னும் அவ் விஸ்வாமித்திராதியர் ஒரேபிறப்பில் வேதியராயினரென்பதும் அமையாது. எங்ஙனமெனில், அவர் வேள்



விப்பிரசாதத்தால் பிறப்பினையடைந்த இயற்கைகர்த்தர். அந்தப்பிரசாதமோ, "அந்தணச்சேயாக" வென்று சங்கற்பித்த பிண்டமொன்றும், "அரசச்சேயாக" வென்று சங்கற்பித்த பிண்டமொன்றும் தம்முள் மாறி அரசமாதும் அந்தணமாதும் உண்டகாரணத்தால் பிறந்தவாதலின் அச்சங்கற்பவித்தின்படியேயாக அரசப்பிறப்பினராகியும் தபோபலத்தினால் வேதியராயினரென்பதே துணிவாம்.

மா—அதிக்கனல், இதனிற்க; மேற்கூறிய வைசியவருணராம் வேளாண்மையோர்க்கு உபவீதகாரணம் ஸ்மிருதி சம்மதத்தான் விளக்கியருளினீர்கள். மற்றும் அவ்வுபவீததாரணஞ் செய்தற்குப் பிரதமகாலத்தை அடியேற்கருளுக.

## உபநயன விதி—மநு.

ஆசி—கர்ப்பாஷ்டமேப்தேகுர்வீத ப்ராஹ்மணஸ்யோபநயனம்
கர்ப்பாதேகாதசேராஜ்ஞோ கர்ப்பாத்து த்வாதசேவிஶ:

என்ற சுலோகத்தால் வேதியர் எட்டாமாண்டினும், க்ஷத்திரியர் பதினொராமாண்டினும், வைசியர் பனிரெண்டாமாண்டினும் பூணூல் தரித்தல் முறையென்பதாம்.

பிர்ஹ்மவர்ச்சஸகாமஸ்ய கார்யம்விப்ரஸ்யபஞ்சமே
ராக்ஞோபலார்த்திஷஷ்டேவைஸ்யஸ்யேஹார்த்தினோஷ்டமே

என்ற சுலோகத்தால், பிரமவொளிவிரும்பின வேதியர் ஐந்து வயதினும், பலத்தை விரும்பின அரசர் ஆறுவயதினும், பொருளை விரும்பின வைசியர் எட்டுவயதினும் உபநயனஞ் செய்துகொள்ளக்கடவன் என்பதாம்.

ஆஷோடஶாத்ப்ராஹ்மணஸ்ய ஸாவித்ரீநாதிவர்த்ததே
ஆத்வாவிம்ஶாத்க்ஷத்ரபந்தோராசதுர்விம்ஶதேர்விஶ:

என்ற சுலோகத்தால், பிராமணர் பதினாறுவயதினளவும், க்ஷத்திரியர் இருபத்திரண்டுவயதினளவும், வைசியர் இருபத்துநான்கு

வயதினளவும் உபநயனகாலமாகவுங் கொள்ளலாமென்றாய் ஏற்படுகிறது. [இதனால் மேற்கூறிய உபநயனகாலத்தைத் தவறிய மூன்று வர்ணத்தாரும் காலவரைவித்தியாசமாகத் திணைப்பட்டால் உத்தமம், மத்திமம், அதமம் என முத்திறவகைப்பாற் கூறினர்போலும்.]

மா—அதிர்தனன். இதுநிற்க; மேற்கூறிய நான்குவருணத்தார்க்கும் ஆசௌசதினப்பற்றிச் சற்றுவிஸ்தாரமாய் அருள்வீராக.

## ஆசௌசவிதி—ம௫.

ஆ—சுத்யேத்விப்ரோதசாஹேந த்வாதசாஹேநபூமிப:
வைஸ்யபஞ்சதசாஹேந சூத்ரோமாஸேநசுத்யதி

என்ற சுலோகத்தால் பிராமணர் 10 நாளிலும், க்ஷத்திரியர் 12-நாளிலும், வைசியர் 15 நாளிலும், சூத்திரர் ஒருமாசத்திலும் ஆசௌசநீங்கிச் சுத்தராவர்.

மேற்கூறிய நான்குவருணத்தவர்களில் மூன்றாம் வகுப்பினராய வைசியவேளாண்மாக்கள் சூத்திரரொடு முக்கியமாய் இம்மைமறுமைப்பிரயோஜனங்களுக்கு ஏதுவாகிய எல்லா வைதிக லௌகிக கருமங்களுக்கும் கருவியென்று சொல்லப்படும் வேதாகமபுராணம், உபநிஷத்து, வேதாங்கம், என்பவைகளை முறையே ஓதலாகாது. அங்ஙனம் ஓதாதவிடத்தே நல்லறிவின்மையான் ஒழுக்கங்கெடும்; அதுகெடவே சடி கருமங்கள் நடவாதாகும்; அது நடவாதாகவே இருமைப்பயனும் ஒருங்கேகெடும் அதுகெடவே பாவம் வளரும். ஆகவே தானமுதலியனவும் கடனறிந்து செய்யவேண்டுதலின் வேதாதியோதல் ஒருதலையாய் வேளாண்மாக்கட்கு முக்கியதருமமெனவும், இவர்களே வைசியரெனவும் பிரத்தியக்ஷமாய் விளங்கிற்று.

மா—மேற்கூறிய மூவருணத்தார்க்கும் வேதாதிகாரங்கூறிச் சூத்திரர்கட்கு அஃது கூறாமையென்னென்றியம்புக.



ஆ—சூத்திரராவர் மூவரேவலாற்றுதலான் முயற்சியுடைமைப் பற்றிப் போக்கியும், கரணவுடைமைப் பற்றுங் காலமின்மையானும், ஏற்புடைமைதாரிக்குக் கனவினை தெய்வமாகப் போல மேல்வருணத்தாரைய வழிபாடும் முறையே புரிதொழுகலான் இருமைப்பயனுமுளவாகலானும் வேதாதிகாரிகளாய் விதிக்கப்படாமைகாண்க.

மா—அதிர்தனன்; இவ்வாறாக வருணாச்சிரமங்களை நான்கு வகையாய்ப் பிரிக்கப்பட்டமைக்குப் போதுமான காரணம் காட்டுவீர்களாக.

ஆ—சீடா! கூறுவேன் கேட்பாய்:—எல்லாம் வல்லவிறைவனது படைப்பினுள்ளகப்பட்ட அநேகமான வேறுபாட்டுத் தேகபோகத்தோடுங்கூடிய பிறப்பினவாய ஆன்மகோடிகளுள் மனிதர் அறிவு, தொழில், அனுபவிப்பு முதலிய சிறந்த காரணத்தால் பகுத்துக்கொள்ளுதலோடு அடங்கவுமிருத்தலால், மிருக முதலியன அடங்குதலினாலும் அடக்கப்படுதலினாலும் உண்டாகும் பயன் காணுகியலாமைபற்று. அதுபோலவே உயர்ந்ததென்று விளங்கப்பட்டதான மனிதப் பிறப்பையுடைய மக்களுள்ளும் அடக்குவாரும் அடங்குவாருமாகவேயிருப்பது எல்லாவுலக வைதிககருமங்களுக்கும் அனுகூலமும் க்ஷேமமும் பிரயோஜனமுமாகவிருக்கின்றது என்பதை, அரசு, குடி, கற்றோர், கல்லார், உபாத்தியாயன், மாணாக்கன் உடையவன், எளியவன், ஏவுவோன், செய்பவன், ஆண்பால், பெண்பால் எனவும், புண்ணியபாவமும் போலத்தொழிலுள்ளும், மேல்கீழென இடத்துள்ளும் முன்பின் எனகாலத்துள்ளும் பிறவற்றுள்ளும் வழங்குவன பலவாறுபோல பூர்வஜென்மகன்மப்பயனாக ஜாதி, மதம், தொழில், சுகம், துக்கம் முதலியனவும் வாய்த்ததெனத் தெளிவாயறிக.

மா—தேசிகோத்தம! தேவரீர் திருவாய் மலர்ந்தருளிய பன்னூற்பிரமாணங்களானும், பிரமாணக்கர்த்தர்களாம் நல்லாசிரியர்களின் எண்ணடங்காப் பெரும்புகழானும், வைசிய வேளாளரைக்குறித்த இவ்வரிய விஷயங்களையெல்லாம் சாங்கோபாங்கமாக எளியேற்கு எடுத்தோதியருளிய தேவரீரது கிருபாவிசேடத்தானும், நம் வேளாண்மாக்கள் வைசிய வகுப்பினரே

பெனச் செவ்வனே விளங்கிக்கொண்டேன். இனிச்சிற்றறிவும் சிறுதொழிலும்வாய்த்த நாயினேன் வேண்டு கோட்கிணங்கி ஆங்காங்கு பலவாறு சேர்ந்துள சந்தேகவிபரீதங்களை மயக்கற நீக்கியருளிய தேவரீரது பெருமையை யெங்ஙனமறிந்து எவ்வாறு துதிப்பேன். ஆகலின் எல்லாம் வல்ல எம் பரமகருணாநிதியாம் பரமேஸ்வரனருளால் நீடூழிவாழப் பன்முறையும் பிரார்த்திக்கின்றேன். தேவரீரது திருவடிக்கமலங்களுக்கு நமஸ்காரம். நமஸ்காரம்.

ஆ—னத்திற நன்மை தீமைகட்கும் ஒத்த காரணமொன்றிருக்க, வேறுசில கூறுவது அறியாமையும் திரிபுணர்ச்சியுமாம். ஆகவே இவ்வருணாசிரம தருமமுறைகளை அறிவுடையோர் பலராலும் முற்காலத்தும் பிற்காலத்தும் விரித்துரைத்த நூல்கள் பலவற்றால் "எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு" என்ற மெய்ம்மொழிப்படித்தாய் தத்தம் வருணாச்சிரமதருமங்களை நன்குணர்ந்து அறம் பொருளின்பம் வீடென்னும் புருஷார்த்தங்கள் நான்கையுந் தேடியனுபவிப்பதே முறையாமெனக்கொண் டொழுகுவாராக.

வேளாள சூளாமணி

முற்றிற்று.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

கவிச்சக்கரவர்த்தியாம் கம்பராற்செய்யப்பட்ட

வேளாளரது

# திருக்கை வழக்கம்.

## கலிவெண்பா.

கங்கை குலந்தழைக்கக் காட்டும் பெருங்கீர்த்தி
மங்கை பிரியாமல் வாழுங்கை — திங்களணி
எம்பிரா னெம்பெருமா னிந்திராதி பக்கரிய
தம்பிரா னுக்குரைத்த சந்தைக்கை — பம்பொன்
வளைவாரி வையகமும் வானகமும் போற்ற
முளைவாரி வந்த முழுக்கை — இளைவாழக்
கற்கித் தலைத்தாரைக் கல்லா லெறியமறக்
தெற்கிற் றுயிர்க்கேசி தெறித்திடுங்கை — பாசைதிரு
தோமா வடிக்கமலிற் சிந்திற்றென் றேகமுங்கை
யாமா மெனவே யரிந்திடுங்கை — வாமமறை.
ஓதுபுகழ் நாயுடைய நாதன் புரமென்ற
போதுநடி கொண்டு முடிக்குங்கை — நிகல
அஞ்செழுத்தே யொன்றாகி யப்பரெனத் தோன்றியரன்
செஞ்சரணத் தேபூசை செய்யுங்கை — வஞ்சியர்பால்
நாதனைத் தான்விடுத்த சுந்தரனைக் காணுமந்
பேதமறத் தானவிறு பிறங்கை — பூதலத்தின்
மிக்க புலவனுக்கா வேசியனை மட்டாகத்
தக்கசிவிகைதனை தாங்குங்கை — மைக்கடல்வாய்
மூக்கிற் புகைபுரிந்த மூதூரின் வாயிடத்து
நீக்கியதை நாக்கதனி லீட்டுங்கை — பாக்கமுடன்

ஏதமற்ற கீர்த்தியைக்கொண் டேட்டைக்கத்தி லேயடிமைச்
சாதனமிட் டேகொடுத்த தங்கக்கை—மேதினியிற்

சூலி சூதகிற் சடக்கடவப் போதாசைமு
பாலடிசி றன்னைப் படைக்குங்கை—சாலவே

நாணத் தராம னவெக்காமற் சுவாசத்
புசனைன் பிணத்தைப் பரிக்குங்கை—காணவே

தண்டமிழோன் றன்மனத்திற் சந்தேகந் தீர்க்கவுந்
உண்டவயிற் றைப்பிளந் தூற்றுங்கை—கண்டளவில்

நீலிதனக் கஞ்சி நின்றவணி கேசனுக்காக்
சேர்ந் தபயங் கொடுக்குங்கை—பாலமெனும்

வன்னி யிடைமூழ்கி வானோர் பழிகழுவிக்
கன்னிதனை யேமணந்த காட்சிக்கை—துன்னுமொரு

பேருலகை யெல்லாம் பிழைப்பிக்க மோர்கொழுவின்
கூரியொரு வன்கழுத்தைக் குத்துங்கை—பாரறிய

வீறு பெரும்பறையன் வியாழ லோர்நிலத்திற்
சோறுபிசைந் துண்ட சுடர்மணிக்கை—யாறுந்

தொடையி லெழுவிலக்கி தோற்றுவிக்கப் பட்டின்
புடவை கிழித்த பெருங்கை—கடல்சூழ்ந்த

பார்பூட்டு மன்னர் பரிகரிபூட் டக்கதிரோன்
தேர்பூட்ட வேர்பூட்டுஞ் செம்பொற்கை—வீரமகன்

ஐங்கோ னெடுக்க வணைகோ லொடுகலுழும்
பைங்கோல் பிடிக்கும் பதுமக்கை—பிங்கிதமுந்

சீர்படைத்த பூபாலர் செங்கோல் பிடிப்பதற்குப்
பேர்படைத்த மேழி பிடிக்குங்கை—கார்படைத்த

மின்சுமதி கீர்த்தியைப்போன் மேதினியெல் லாந்தழைக்கச்
செஞ்சாலி நாற்றைத் தெளிக்குங்கை—பஞ்சமல்

வெள்ளைக் களைகளைந்து வீறும் பயிர்தழைக்கக்
கள்ளக் களைகளைந்த கற்பகக்கை—வள்ளுறையும்

விற்போர் மதகரிப்போர் வெம்பரிப்போர் வெற்றிப்போர்
நெற்போர் முதற்போர் நெரித்திடுங்கை—கற்பகம்போன்



மேழிக் கொடியிங்க வெற்றிக் கொடிகுயிலின்
வாழிக் கொடியே மருவுங்கை—ஏழுலகில்

ஆதுலர்க்குச் செம்பொ னளிக்குங்கை யாகமங்கள்
வேத புராணங்கள் விரிக்குங்கை—நீதிநெறி

மானங் குலங்கல்வி வண்மை யறிவுடைமை
தானந் தருமந் தழைக்குங்கை—பானந்தமிழ்

கல்லாத வென்றுமற் கற்றோர்க ளென்றுமல்
லெல்லாரை யுங்காத்தி டேற்றுங்கை—வல்லமைசேர்

மைம்மா முகிலுலகை வாழ்விக்கு மேன்மைபோற்
கைம்மா றிலாதளித்த கற்பகக்கை—சம்மையார்

கருணை நீர்போ லுலகத் தவர்க்கெல்லாம்
பேறுநிவா ரியும்ப்ர தாபக்கை—பாரில்

உடுக்கை யிழந்தவன் கைபோல வாங்கே
கொடுக்க விசைந்த குளிர்க்கை—பிடிக்கணிறன்

மாமறையோர் மன்னர் வணிகர் முதலாகத்
தாமவ்வா மற்கொடுத்துத் தாங்குங்கை—தேமருவு

நாவிற் புகழ்கம்ப நாடற் கடிமையென்றே
மாவைக் கரைத்துமுன்னே வைக்குங்கை—பாவலர்தாம்

எழுப தோதியரங் கேற்றுங் களரியிலே
காரிவிட நாகங் கடிக்குங்கை—பாரறியச்

சங்கையிட்டுத் தள்ளாமற் றன்சோற்றை வந்தவர்க்குப்
பங்கையிட் டிரட்சித்த பங்கயக்கை—பொங்கமொடு

செம்பொன் விளைகளத்தார் செந்நெல் விளைந்ததனை
நம்பிமறை யோர்க்களித்த நாயகக்கை—செம்பொன்

விளைபயிரைப் பார்த்து விரைகால் புலத்தை
வளையமதி விட்டு வருங்கை—காமதனில்

ஏற்கவந்த பாவலருக் கில்லையென்று மற்செய்பொன்
கார்க்கையினன் முக்கையிட்ட கற்பகக்கை—தீர்க்கமதாந்

திருப்பருத்திக் குன்றிற் சிவனா லயங்கள்
விருப்புடனே கட்டுவித்து வீறுங்கை—திருப்புகழை

எண்ணிலா வெழுத்தை யிசையை யிலக்கணத்தை
வண்மைபெற வுண்டாக்கும் வாழ்நாகை—பண்ணமைந்த
வேதமொரு நான்கினையு மிக்கதிரு நூலுடனல்
ஓதியுணர்த்த தேகுருவைப் போக்குங்கை—பூதலத்திற்
பாவலரை யெக்கிற் படிமேற் கனியுமெனக்
காவலுடை மன்னர் வருந்தாக்கை—காவலின்
மண்ணிற் கடலின் மலையிற் பெரியதெனை
எண்ணியெழு திக்கொடுத்த வேற்றக்கை—திண்மையுதாய்
வையகமெக் குந்தேடி வந்தவமி ழோர்புகழ்ச்
செய்யமுடி யைக்கொடுத்த செம்பொற்கை—ஐயபுகழ்
அட்டதிக்கு மென்கீர்த்தி யாயிரத்தெட் டானதனை
வெட்டிப் பரணிகொண்ட வீரக்கை—திட்டமுடன்
பொன்னு லழுதும் பொரிக்கவியுந் தான்கொணர்ந்து
தன்னு லவர்க்களித்த நாணயக்கை—முன்னுள்
மனக்கவலை யுற்ற வணிகன்முன்னே நின்று
தனக்கா வெனக்கேட்ட தங்கக்கை—கனக்கவே
அன்றீன்ற நாலெழுப தானவெரு மைத்திறத்தைக்
கன்றோடு நல்குங் கடகக்கை—வென்றிதரும்
தூரான தாரா பிரக்கவிகள் லோர்கவிக்குச்
சீராக நல்குந் தியாகக்கை—பெரியலைச்
சாற்றுமொட்டக் கூத்தன் சரசகவி சொல்லப்பா
லாற்றுநீர் காற்கொணர்ந்த வாண்மைக்கை—போற்றிபெற
வண்டமிழோன் ருனுதைத்த வாகுளாக ளுக்குப்பொன்
வெண்டயமிட் டேவணங்கும் வெற்றிக்கை—புண்டரிகக்
கையாற் புல்லன் களக்குமுடி போற்குட்டச்
செய்யாழி பண்ணியிட்ட தீரக்கை—செய்ய
எறும்புக்கு மாப்பதந்தா னில்லையென்ற மட்டிற்
றிறம்புக்க யானைதருஞ் செங்கை—பறம்புதனில்
என்று பிரமுனிவர்க் கேற்பபடி யப்படியே
பன்றுக் கொடுக்கும் பாரமக்கை—வின்றுடர்



கூர்ந்தபுக ழண்டகோளத் திலும்படர
நாற்றிக்கு மேருவினி னாட்டுங்கை—சீக்குகனை
ஆதாரமானவனை மைக்கதனை சக்கரனைப்
பாதார விந்தம் பணியுங்கை—நீதி
நடக்கை யிருக்கை நலக்கை யிருக்கை
கொடுக்கை செழுங்கை குளிர்க்கை—[illegible]
சீராக வுண்டாக்கும் [illegible] பெருங்கருணைக்
காராளர் கற்பகப்பூங் கை.

திருக்கை வழக்க முற்றுப் பெற்றது.

அழுங்குழவிக் கன்புடைய தாயேபோ லனைத்துயிர்க்கும்
எழுங்கருணைப் பெருக்கான ரெனியரோ யாம்புகழ
உழுக்கொழுவிற் கருவியி யுலகமுதற் கருவாகச்
செழுங்கமலத் தயனிவரைச் செய்துலகஞ் செய்வானேல்

வேதியர்தம் முயர்குலமும் விறல்வேந்தர் பெருங்குலமும்
நீதிவளம் படைத்துடைய நிதிவணிகர் தங்குலமுஞ்
சாதிவளம் படைத்துடைய தாயனைய காராளர்
கோதில்குலந் தனக்குரிய குலமாகிற் கூறீரே.

வாழ்த்து.

பார்வாழி நான்மறையும் பருணிதரா குதிவாழி
கார்வாழி வளவர்பிரான் காவேரி நதிவாழி
பேர்வாழி பெருக்காளர் பெருஞ்செல்வக் கிளைவாழி
ஏர்வாழி யிசைவாழி யெழுபத்தொன் பதுநாடே.



௨

வேலுமயிலுந்துணை.

சுவாநுபூதி மகானொருவரால் செய்யப்பட்டு
இதுவரையில் அச்சிடாதிருந்த

# சமரபுரி சண்முகர்

# பஞ்சரத்நம்.

---

## பதினறடி ஆசிரிய விருத்தம்.

சீர்கொண்டவகிலபிரமாண்டநாயககோடி திவ்யகுணரூபப்ரகாசா
தேவதிருப்திப்ரசாதவஜ்ரவேலகன ஸ்ரீகுலிசன்மகள்சமேதா
சிவசயகயிலாசகிரியார்ஜிதாகனவி சித்ரபீடாரோஹண
ஜெயவகண்டிதவலகதிருசகிருபாக்ஷேத்ரசதுர் வேதசாஸ்த்ரார்த்தபோத
கார்கொண்டகுக்கர்ச்சூரமர்தாரகன ககலிப்டசுவனதேசா
கமழ்பாரிஜாதமல்லிகைவகுளசண்பகா ரம்புனைகடம்புமாசா
கர்ப்பூரதீபநீராஞ்சனப்ரமதகண கண்டீரகண்டிதகுரு
கனகமயமிருகமதநிர்தோன்னதகுஞ்ரசல கவிப்புணாடக்கதவேசா
வர்கொண்டதும்புருநாரதகீதவித்யா தார்க்கெழுங்கீதநாதா
வகாங்கஜெகதாதாந்தயோகாங்கதூன தீருதபூர்த்திப்ரசன்ன
இச்சிதர்க்கினியமகிருதியஷ்டவசுரஷ்கா ஹிமயபர்வதவுகித்ரா
இபவதனசகோதரசிரேஷ்டசப்தரிஷி யேகசாஷ்டாங்கபாத



தேச்கொண்டகனிலைகண்டப்ரசண்டமடல் திரிபுராந்தகருமார
திரிலோககாருண்யமூர்த்தி தரிசனமெனக்களித்தாள்
சின்மயாகந்தகுரு திவ்ய சிந்தைதருங்கொண்டபாலே
ஜெகமெயடியவர்பெருக்கமிழ்முராஜரிபின்மருகதிகழ்சமரபுரிமுருகனே. (க)

வேதவேதாந்தமௌனசிவாக்யமாக்ய மெய்ஞானக்கப்ரக்கியாதியன்
மிருமகோத்தமசங்கநுதீசப்ரசன்கதி கலிங்கன்
மித்ருகாத்தல்யசாஷாத்காரயோகஷீ லக்ஷண்யபூரணகடாக்ஷன்
வித்தகர்பெறும்ப்ரயோஜனவலங்கிருதபக்ஷ வித்தகுருதம்மாசதருமன்
நாதநாதாந்தநிர்குணநிர்த்தகைவல்ய ஞானாநந்தஜோதிநாதன்
நடனமணியனிலகமலசாதுர்ப்புத மயானபிர்தருணேபிஷேகன்
சுவாத்மானுபவகேயூரகுண்டலமகுட கங்கணவபூஷணன்
ராஜராஜாங்கயோகாப்யாஸவாமிர்த சாம்பிள்ளைபெருமுலாரன்
தாதநாதாவெனத்தனுசத்தனயங்குதிம் தனிர்த்தஜரிதமயிலன்
சடக்கடசடாக்ஷிகன்குளிர்வாருக தசசதனைரம்பயாகன்
சண்டப்ரசண்டசித்தண்டபிண்டப்ரளய நாருகாருகண்டன்
சாவேறுப்பவதீத்தியாகந்தமூர்த்தியென் பஞ்சவமகத்திருநாள்
சீதசீதனபூர்ணமதிமண்டலச்செசூழ் தேன்மடைதிறந்தண்ணெங்
தேக்கிட்டடுப்பெருபசிந்திமௌனச் செருக்குதூவாவுகரனைக்
சேட்டையற்றருளின்பவீட்டிருட்டத்தரையென் சிந்தைதருடிவைத்தபுனைன்
ஜெகமெயடியவர்பெருக மகிழ்முராஜரிபின்மருகதிகழ்சமரபுரிமுருகனே. ()

ஹராஹரமகாதேவசெம்பீசவண புகாமசாமதெளிவாய
ஐயமோக்கியிம்ஜியுங்ஜிபும் ஆங்காா ஹ்ரீங்காரகிரீட
வதிகாரகிருஜாதிபாரதகோர யமாதிபதிரிரிய
வரியேறுநவவீரர்பனியா அருளவீர மயிலேறிவருமெருவே
பரிபூரபவாரகமயவெருளிவாரய்வோம் பார்வம்பிகாகுமார
பஞ்சாக்ஷரவசாடகரதூஷ்காரபரி பூர்ணத்துபதிபதுல்ய
பரமண்டலத்தந்தாயபீதாம்பரமங்கிருதபன்னிருபுயதயா
பகவதீதகம்பமன்யாக்ஷதனகுளுஷ்டகாரணமத்தரைநக்கா
திரிபுரபவர்யமதிகவிழாவிபவாயறும்செலுகிதியநாதர்நிதம்
சிவபோதமவர்வேதனதியதவெபருகாதி திடீமோகருநாதனே
ஜெயஜூலபீஜாக்ஷரப்ரதாபாதிவ்யதேஜோன்மயாகுருநாயா
சித்பவனைகட்கசட்கோணசக்ராலயத்தெருசடாக்ஷரசொருபா
தெரிவைவயர்சமொழுகுதினெஜிஸ்மகிழ்ந்தடமேராஜாதிராடம்னைதந்
திருவடியைனவரதமினைவுகொவினைவுதநிசெயதயவுசெயுமதிசயா [யும்
ஜெயவிஜயமுதியபரசிவசயமாமகிலதிசையிலத்வைதமணியே
ஜெகமெயடியவர்பெருகமகிழ்முராஜரிபின்மருகதிகழ்சமரபுரிமுருகனே. (௩)

ஆதிமுருகன் பிரமதேவனைச் சிறைவைத்த அயிலோன் [illegible] விநோத
வைவகார்த்திகேயமுருகன் புகழ்த்திருச் [illegible] முருகன்
அடர்த்திரிபுரந்தனில் வேல் [illegible] முருகனருள் [illegible]
ஆண்டிக்கிழச்சொரூபம் [illegible]
பாதிமதிசேகரன் [illegible] முருகன்
படருமயிலேறிய [illegible] முருகன்
பாலோகசுரலோகமுருகனை [illegible]
பகலோனு [illegible] முருகன் [illegible] முருகன்

தாதவிழ்கடம்பணியுமுருகனிரத்தினமகுடன் [illegible] புனைந்தமுருகன் [கன
தனிமாவிலன்முடிகொய்முருகனென் குறைதவிர்த்தாளும் வடிவேலுமுரு
சத்திதரகத்தமுருகன் தெரியருள்பனிருதண்டோள்விளங்குமுருகன்
தமிழோர்தாதர்க்கருளுபொருள்பெருங்காவற்றமனைதவிர்த்தாண்டமுருகன்
நீதிவாதர்புகழ்க்குருமுருகன் மர்த்தினார்த்தகல்யமுருகன்
சிவமுருகன் மகிழ்ச்சியதவமுருகன் மதிலணைசெயமாரர்த்திகேயமுருகன் [கன்
செந்திசொல்முருகன் வளச்செங்கைமுருகன் திருச்செம்பொன் மாமேருமுரு
நெஞ்சமெய்யடியவர்பெருகமகிழ்முநாதரிவின்மருகன் திகழ்சமாபுரிமுருகனே. (௪)

உதிக்கின்றகர்ப்பமொருநாள் கண்டிலைச்சோரணித்தவிதமிரண்டுமீண்டுருவாக்
தொத்தாசிக்குமிழியாவைக்குநால்பிறந்தீரண்டோரெழுதினங்கதேதா
மொண்பதிற்படிரண்டினைக்கண்டத்காயுநம்பத்தமூன்றிலெல்ல
மொக்குமொருபகுமெழுசிச்சைபதிலொழிலாமுகுள்வினங்காயிருபதில்
விதிக்குமிருபத்தெழுதினங்கிலன்னியார்மைமெய்யாகாண்முப்பதில்
விஷயங்களுண்ணுத்தாய்தோருமுண்டாகுமிருமாதமதைப்புறங்காய்
மேவுமுன்றிற்சத்துவிரல்களாய்காலின் முகமுண்டாயவினக்குலைந்தில்
வியாபிசெவியாதில்கமேழி னெழுமாத்தியாமிர்காம்புதிரமும்
மதிக்குநாபிச்சலமலர்வாய்பாரமெட்டில் மகிழ்ந்நினைபுண்டாகா
மருநாயிவழிசென்றடம்பிசெவுத்தில்வருமதிவுமிகுவிதனவேதை
வாதைவிட்டருளின்பவிசெபறவேண்டிமேல்வருபத்துமாதத்திலிம்
மாகிலத்தன்னிற்பிறந்தமிவழிக்குசலமலமாக்தனைதவிழ்த்து
நிதிக்குள்வளர்மதியெனவளர்ந்தொடிமெக்குத்திரித்துகாமப்பருவமாய்த்
தியமடைவார்க்கடியையானாய்ச்சத்சலத்திக்குழிபமிற்கொடியவென்
சித்தமதகற்றிமெய்ப்பத்திசெயவைத்ததாடிசித்திலைடைகுறத்திமகிழ்கா
நெஞ்சமெய்யடியவர்பெருகமகிழ்முநாதரிவின்மருகன் திகழ்சமாபுரிமுருகனே ௫

பஞ்சரத்ந முற்றிற்று.

தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம்,
எழும்பூர், சென்னை-600 008.

**தவணைத்தாள்.**

சே. எண் : 117302  ப. எண் : Y592V

| வழங்கிய நாள். (1) | திரும்பிய நாள். (2) | வழங்கிய நாள். (1) | திரும்பிய நாள். (2) |
|---|---|---|---|
| 19.5.28 | 2[illegible] | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

S.F. 259A-6—1,00,000—30-1-84.